
# திருக்கோயில்

ஜூலை 1991 விலை ரூ. 3





மேதகு தமிழக ஆளுநர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி **ஜெ. ஜெயலலிதா** அவர்களும் அவர்களுடைய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அனைத்து அமைச்சர்களும் வீற்றிருக்கும் காட்சி.

முகப்பு:

சேலம்

அருள்மிகு கோட்டை மாரியம்மன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு ஆடி<br>ஜூலை 1991 விலை ரூ. 3-00 | மணி : 7 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

*உயர்திரு ஆணையர் அவர்கள்*
*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை*
*சென்னை — 600 034*

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் உள்ளம்
—திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

சித்திரபாரதம்
—செவ்வேள்

கந்தவேள்கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

திருஞானசம்பந்தர் பாடிய திருநெற்குன்றம்
—இல. தியாகராஜன் எம்.ஏ. எம். ஃபில்.

வள்ளலார் கண்ட நாவுக்கரசர்
—எஸ். ஜோதி பி.ஏ.

ஞானக்குழந்தை
—டாக்டர் இரா. நாகசாமி.

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை
—அண்ணாமலை அடிகள்


விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்
—கோ. சண்முகம்.

மூவர் ஏற்றிய மொழி விளக்கு.
—மயிலை சீனிவாசன்

பஞ்சாட்சர மகிமை
மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு)



# அருளாளர்களின் அருள் அனுபவம்




**திருமந்திரச்செம்மல் டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்**

திருமிகு தலைமைச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-600 009


இறைவன் சத்திய ஞான தனிப்பொருள் ஆகும். அதுவே ஆனந்தம். வற்றாத இன்பக் கடல். இறைவனை அனுபவித்த அருளாளர்கள் இந்தப் பேரின்பக் கடலிலே முழுகித் திளைத்து நிற்பர். அருளாளர்கள் இறைவனுடன் ஒன்றி நிற்பதால் இந்த ஆனந்தம் தோன்றுகிறது. ஒன்றி நிற்பதாவது தனது உடல், பொருள், ஆவி, கருவி கரணங்கள் அனைத்தையும் பரத்திலே ஈடுபடுத்தி, மெய் மறந்து, அகண்டமானவியாபகத்தில் தன்னைச் சேர்ப்பித்து, அதனால் கிடைக்கும் இன்பத்தை இடையறாது பருகுதலாகும். இதையே 'நான் பெற்ற இன்பம்' என்றார் திருமூலர்.

எந்த உயிருக்கும் இன்பத்தின்மேல் விருப்பம் இயல்பாகவே உண்டாகும். நாமும் பல வகையான இன்பங்களை விரும்பி அவற்றை அடைய முயற்சித்து அந்த இன்பங்களுக்காகவே வாழ்ந்து வருகின்றோம். இன்பம் என்று ஒன்று இல்லையென்றால் வாழ்வும் கசந்து போய் விடும். இன்பம் பெறுவதே வாழ்வின் குறிக்கோள் என்னும் ஒருவித மாயையில் உயிரானது உடலையும், அதன் கருவிகளையும் பல துறைகளில் பயன்படுத்துகிறது. நமது மனம் ஒரு குரங்குபோல ஒரு பொருளில் அதை நுகர்ந்து, இன்பம் பெற்று திருப்தி அடைந்தவுடன், வேறொரு பொருளுக்குத் தாவுகின்றது. இவ்வுலகிலே நமக்கு பல பொருள்களை அனுபவிக்க வாய்ப்பினைத் திருவருளால் நாம் பெற்றிருப்பதன் காரணத்தால் நமது இன்ப வேட்டை ஓர் முடிவிலாத பாதையாக அமைந்து விடுகிறது. இதுவும் இறைவனுடைய திருவருளேயாகும். உடலையும், கருவிகளையும் அனுபவிப்பதற்கு பல பொருட்களையும் இந்த உலகிலே நமக்கு இறைவன் தந்தருளி, குழந்தைகளைப் படிப்பிலே ஊக்குவிக்க தின்பண்டங்களைத் தருவது போல, பொருட்களுடன் இன்பஅனுபவத்தைக் கலந்து அவற்றின் மீது மேலும் மேலும் இன்ப நாட்டம் கொள்ளுமாறு நம்மை ஊக்குவித்து, நம்முடைய கர்ம பலன்களை அனுபவிக்க திருவருள் புரிவதும் இறைவனேயாகும். இதனையே ''இன்பமும் இன்பக் கலவையுமாய் நிற்கும்'' என்றார் திருமூலர்.

ஆனால், இப்பூவுலகில் பொருட்களைக் கொண்டு நாம்பெறும் எல்லாவிதமான இன்பங்களுக்கும் ஒரு முடிவு உண்டு. நிலையற்ற பொருட்கள் மீது நாம் நாட்டம் செலுத்தி, அவற்றை நுகர்ந்து, கருவி கரணங்கள் வழியாக நாம் இன்பம் நுகரும்போது அந்த இன்பத்திற்கு மாறாக துன்பம் நேருவதும் இறைவனுடைய பேரருளாகும்.

இன்பத்துறையிலே நாம் ஈடுபடும்போதே அதன் வழிவரும் இடர்களை சந்திக்க நாமே வித்திடுகின்றோம். இப்பிறவியிலே நாம் பெறும் இன்பங்கள், துன்பங்கள், நாம் நமது முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயனே என்பதும் திருவருள் அமைத்துள்ள நீதியாகும்.

''இன்பப் பிறவி படைத்த இறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்''
(திருமந்திரம்...432)

''இன்பம் இடர் என்று இரண்டுற வைத்தது
முன்பவச் செய்கையி னாலே முடிந்தது.''
(திருமந்திரம்.......267)

அருளாளர்கள் துன்பம் கலந்த இன்பத்தை நாடாமல் எல்லாவற்றிற்கும் மேலான பேரின்பத்தை, சிவானந்தத்தை நாடிப் பெறுவர். இதனினும் சிறந்த இன்பம் ஏதுமில்லை. இதுவே முடிவான இன்பமாகும். இந்த நிலையில் உயிருக்கு பரிபூரண அமைதி கிடைத்து, அந்த அமைதியிலே உயிர் நிலைத்து நிற்கும். இதுகாறும் சிற்றின்பத்தை நாடி வந்த உயிரானது இப்போது பேரின்பத்தில் திளைத்து நிற்கும். இப்பேரின்பம் தடையற்றதாய், நிலையானதாய், எல்லை இல்லாததாய் இருக்கும். இத்தகைய இன்பத்திற்கு இருப்பிடம் இறைவன் ஆதலால் இறை அனுபவம் பெற்ற அருளாளர்கள் இறைவனுக்கும், இன்பத்திற்கும் இடைவெளியைக் காண்பதில்லை. இறைவனையே இன்பமாகக் கருதுவர். ''தேனையும், பாலையும், கன்னலையும் ஒத்த இனிய கோன் அவன்'' என்பார் மணிவாசகப் பெருமான். இந்த இன்ப நிலையே அன்பு நிலையுமாகும். இறை இன்பத்தை அனுபவிப்பதும், அன்பு செலுத்தும் பண்பும் ஒன்றேயாகும். ''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னு

டைய அன்பே'' என்பார் மாணிக்கவாசகர். அன்பின் முதிர்ச்சியில் இறை இன்பத்தை அருளாளர் காண்பர்.

''இன்பில் இனி(து) என்றல் இன்(பு) உண்டேல்
இன்புண்டாம்
அன்பு நிலையே அது''.
(திருவருட்பயன்....80)

அருளாளர்கள் பெறும் இன்பம் இறைவனை அறிந்து கொள்வதால் கிடைக்கின்றது. இறை அருளால் அவர்கள் முதலில் ஆன்ம போதம் பெறுகின்றனர். அதாவது பக்குவமடைந்த உயிர்கள் தம்மைப் பற்றித் தெரிந்து கொள்கின்றன. இது ஆன்ம விளக்கமாகும். இத்தோடு நின்றுவிட்டால் மட்டும் போதாது. இறைவனைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்து கொள்ளும் பொழுதுதான் ஆன்ம அறிவு இறை அறிவோடு ஒன்றி நின்று ''கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்'' நலத்தை உயிரானது பெறும். இதுவே ஆனந்த விளக்கம் எனப்படும். சத்திய ஞானானந்தம் என்றும் கூறுவர். இந்த நிலையை அடைய தகுதி பெறும் சீவர்களுகளுடைய உடல் முழுவதிலும், உள்ளத்திலும் மயிர்க்கால்தோறும் பாலுடன் தேனும், பழத்தின் சாறும், தூய்மையான அமுதத்தின் சுவையும்போல ஒருவித இன்பம் பெருகி நிற்கும். இது திருமூலரின் அனுபவமாகும்.

''பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுள்புகச்
சீல மயிர்க்கால் தொறுந்தேக் கிடுமே''
(திருமந்திரம் ....2831)

நாம் உடலையும், கருவி கரணங்களையும் பயன்படுத்தி இன்ப துன்பங்களைப் பெறுகின்றோம். அருளாளர்கள் இறை அறிவு பெற்றவர்கள். கருவி கரணங்களால் அவர்கள் இறைவனைப் பற்றிய ஞானத்தை அடையவில்லை. இறைவனுடைய திருவருளாலே அவன் வழங்கி அருளும் ஞானத்தைப் பெற்று எல்லாவற்றையும் அறிந்து கொள்வார்கள். அதனால் பேரின்பம் பெறுவார்கள். இந்த இன்பத்தை அனுபவித்தவர்களுக்கே அதன் தன்மை விளங்கும். பிறர் அதன் தன்மையை அறிய மாட்டார்கள். கன்னிப்பெண் ஒருத்திக்கு காம இன்பம் தெரியாதது போல இந்த நிலை இருக்கும். கணவனும் மனைவியும் கூடிப்பெறும் இன்பம் வாயினால் சொல்ல முடியாது. இதை அவ்விருவருமே அறிவர். அதேபோல அருளாளர்கள் இறைவனோடு ஒன்றிப்பெறும் இன்பத்தை அவர்களே அறிவர். உடல் முதலிய கருவிகளின் துணையைக் கொண்டு உலகியல் பொருட்களை அறிந்து கொள்ளலாம். உயிரின் தன்மையையோ இறைத் தன்மையையோ அவற்றால் அறிந்து கொள்ள முடியாது. அவ்வாறு அறிந்து கொள்வதாக நம்மில் சிலர் நினைத்தாலும் அது கற்பனையே ஆகும். இறை ஞானம் பெற்றவரே முழுமையான அறிவினைப் பெற்றவர்கள். அவர்களே வீட்டின்பம் பெறுவர். மற்றவர்களுடைய வினை நீங்குவதில்லை. ஆணவம் அகலுவதில்லை.



**தமிழக அரசின் தலைமைச் செயலாளர்**
**திருமந்திரச் செம்மல்**
**திருமிகு டி.வி.வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள்**

---

'கன்னிகைதான் காமரதம் காணாள்;
மருவிஇரு வரும்புணர வந்த இன்பம்

வாயினால் பேசரிது; மணந்தவர்தாம் உணர்வர்; உருவில் உயிர் வடிவதுவும்உணர்த்திலர் காண்; சிவனை உணராதார் உணர்வினால் உணர்வதுகற் பனைகாண்; அருள்பெறின், அவ் இருவரையும் அறிவு இறந்து அங்கு அறிவர் அறியாரேல்; பிறப்பும் விடாது: ஆணவமும் அறாதே.''
(சிவஞான சித்தியார் 228)

உலகப் பொருட்களை அனுபவிக்க நமது உடல் பயன்படுகிறது. உடலின் வேட்கைகளைத் திருப்திசெய்து அதனால் இன்டம்அடையும்பொழுது அந்த உடலே நமக்கு இன்பத்தை தருவது போன்ற ஒரு மயக்கம் ஏற்படுகிறது. உடல் முழுவதுமே கரும்பும் தேனும் கலந்திருப்பது போல ஒரு உணர்வு ஏற்படுகிறது. கரும்பும்தேனும் தித்திக்கும் பொருள்கள்தான். ஆனால், அவற்றைவிட மேலானதொரு இன்பத்தை தரக்கூடிய ஒரு பொருள் உண்டு. அதுவே சிவப்பரம்பொருளாகும். இறைவன் திருவருளால் அந்த சிவப்பரம்பொருளை, நமச்சிவாயக் கனியை நாடுகின்ற ஆர்வம் நம்முடைய உள்ளத்திலே தோன்ற தொடங்கிவிட்டால் அதைவிட கூடுதலான ஆனந்தம் வேறு எந்த வழிகளிலும் பெற இயலாது. உள்ளத்தினுள்ளே அரும்புகின்ற மனமாகிய சிவானந்தத்தை உணர்வு நிலையில் நாம் பெறும் பொழுது, உடலும் அதனால் பெறக்கூடிய இன்பங்களும், சுவைகளும் ''சீ'' எனப் புளித்து விடும். இதுவும் திருமூலரின் அனுபவமாகும்.



''கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே.''
(திருமந்திரம்.....2976)

இந்த சிவானந்தத்தைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் தெளிந்த சிந்தையுடன் இருக்க வேண்டும் என்கிறார் திருஞானசம்பந்தர். இறைவன் அப்பாலுக்கு அப்பாலாய் நிற்பவன். ஐம்பூதங்களையும் தம்முள் அடக்கி வைத்துக் கொண்டிருப்பவன். சந்திரனைத் தலையிலே அணிந்து கொள்ள வல்லவன். அத்தகையவன் எல்லோருடைய உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறான். அவனுடைய குடியிருப்பு தெளிவாக இருக்க வேண்டும். தூய்மையாக இருக்க வேண்டும். மாசு மரு நீங்கி இருக்க வேண்டும். ஆசைகளாலும் தீய குணங்களாலும் அழுக்கடைந்து கலங்காமல் இருக்க வேண்டும். தூய்மையான உள்ளத்துடன் இறைவனுக்கு இன்பம் தரும் பணியை நாள்தோறும் செய்ய வேண்டும். அது என்ன பணி? சிவபெருமானை தினந்தோறும் நாடிச் செல்ல வேண்டும். சென்று அவன் புகழைப் பாடி துதிக்க வேண்டும். அவனுடைய குணங்களையும் புகழையும் உலகுக்கு எடுத்துக் கூற வேண்டும். அவ்வாறு செய்தால் குறைகள் முற்றும் ஒழிந்து இறைவனைச் சந்திக்கலாம். தெளிந்த சிந்தையுள் சந்திக்கலாம். அவன் அங்கே எவ்வாறு இருப்பான்? ''தேனுமாய் அமுதாகி நின்றான்'' என்பார் திருஞானசம்பந்தர். தேனும் அமுதமும் தரக்கூடிய இன்பத்தை சிவபெருமான் தெளிந்த சிந்தையுள் நின்று நமக்குக் கொடுத்துக் கொண்டேயிருப்பான்.

''தேனு மாய்அமு தாகிநின் றான்தெளி
சிந்தையுள்;
வானு மாய்மதி சூடவல் லான்மங்க லக்குடிக்
கோனை நாள்தொறும் ஏத்திக் குணங்கொடு
கூறுவார்
ஊனம் ஆனவை போய்அறும்; உய்யும்
வகைஅதே''

இறைவனுடைய அருளால் அருளாளர்களுடைய தெளிந்த சிந்தையில் வைரமணி போன்ற இறைவனைக்கண்டறிந்த மாத்திரத்திலேயே அன்பர்களுடைய உள்ளத்தில் தனிப்பெரும் இன்பம் பொங்குகின்றது. அந்த இன்பத்திற்கு முன், இந்த உலகத்திலுள்ள மற்ற சுவைதரும் பொருள்களெல்லாம் சுவையற்றுப் போகின்றன. முருகப்பெருமான் மீது அளவிலா பற்று வைத்து ஆழ்ந்த இன்பம் பெற்ற ஒப்பற்ற அனுபூதிமானாகிய அருணகிரிநாதரும் திருமூலரைப் போலவே உவகைபொங்கப் பாடுகின்றார்.

''பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி
னால்மெல்ல மெல்லஉள்ள

அரும்பும் தனிப்பர மனந்தம்
தித்தித் தறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும்
புளித்தறக் கைத்ததுவே.''

சிவானந்தத் தேனைப் பருகி, அந்த இன்பத்திலே மூழ்கித் திளைத்து நிற்பவர் மாணிக்கவாசகப் பெருமான். 'நானேயோ தவம் செய்தேன்?'' என்று கேட்பவர். சிவன் அவன் சிந்தையுளே புகுந்த நிலையைக் கண்டு எண்ணி எண்ணி வியப்பு மேலிட்டு நிற்பவர். தேனாய் இன் அமுதமாய் சிவபெருமான் தித்திக்கும் தன்மையை உள்ளத்திலே கண்டவர். பூவினுள் இருக்கும் தேன் அவரை ஈர்க்குமா? ஈர்க்காதே. ஆனால், சாதாரண தும்பிக்கு சிவ்வானந்தத் தேனின் அருமை எவ்வாறு தெரியும்? பூக்களிலுள்ள தேனையும் நறுமணத்தையும் மட்டுமே நாடிச் சென்று சுற்றித் திரிகின்றது. இதுஎன்ன பயனற்ற பணி என்று நினைக்கிறார் மணிவாசகப் பெருமான். பூவிலுள்ள தேனுக்காகச் சுற்றாமல் நாள்தோறும் நினைக்கும்பொழுதெல்லாம், காணும் பொழுதெல்லாம் எப்பொழுதுமே தன் நெஞ்சம் உருக உருக திருக்கூத்துடையானை அடைந்து அவனைப் பாடித் திரிவதால் கிடைக்கும் ஆனந்தத் தேனினைப் பருகி, இன்பம்எய்துவது சாலச்சிறந்தது என்றும், ஆகவே அதைத் தும்பிசெய்யவேண்டும் என்றும் மாணிக்கவாசக பெருமான் தும்பியைக் கடிந்து கொள்கின்றார். உலகோரிடம் பாசம் வைக்காமல், தெய்வத்தின் மீது பற்றை வைக்கும்பொழுது உயிருக்கு கிடைக்கும் ஆனந்தமே எல்லாவற்றிற்கும் மேலானதாகும் என்கிற கருத்தை மாணிக்க வாசகர் தெளிவுபடுத்துகின்றார்.

''தினைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன்
உண்ணாதே,
நினைத்தொறும், காண்தொறும், பேசும்
தோறும், எப்போதும்,
அனைத்து எலும்பு உள்நெக, ஆனந்தத்தேன்
சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று
ஊதாய்; கோத்தும்பீ!''
(திருவாசகம்-திருக்கோத்தும்பி)

உலகப் பொருட்கள் மீது பாசத்தை வளர்க்க உதவுவது நமது உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் கரணங்களும் ஆகும். கருவி கரணங்கள் ஜடப்பொருள்கள் ஆகும். நமது உயிரே அவற்றை புறப்பொருட்கள் மீது செலுத்துகின்றது. ஆனால், இறை அனுபவம் பெற்ற அருளாளர்களுக்கு இதே கருவி கரணங்கள் சிவானந்தத்தில் அருளாளர்கள் தொடர்ந்து திளைத்து நிற்க உதவும் கருவிகளாகத் தத்தம் தன்மை மாறிவிடுகின்றன. அவற்றைக் கொண்டே அருளாளர்கள் சிவானுபவத்தில் இருந்து கிடைக்கும் பேரின்பத்தை மேலும் மேலும் பருகி அமைதி அடைய பயன் படுத்திக்கொள்கிறார்கள். உயிர் ஒரு பக்கம், உடல் ஒரு பக்கம் என்று இருவித பாதைகளிலே அவை செல்லாமல் சித்தத்தை சிவமாக்கும் பாதையிலே அவற்றைச் செலுத்திப்பேரின்பம் அடைகின்றார்கள். தன்னை ஆட்கொண்ட பிரானை ''பித்தன் இவன்'' என அழைத்தார் சுந்தரமூர்த்தி நாயனார். ஆட்கொள்ளப் பட்ட காரணத்தால் அவருடைய சீவன் சிவமாம் தன்மையைப் பெற்றுவிட்டது. அந்த நிலையில் அவர் தில்லையம்பதியில் நடராஜப் பெருமானை தரிசிக்கும்போது அவருடைய கருவி கரணங்கள் எல்லாம் சிவானுபவத்தில் மூழ்கிப் பேரின்பத்தில் திளைத்து நின்ற ஒரு ஒப்பற்றக் காட்சியை சேக்கிழார் பெருமான் தனது அகக்கண்களால் கண்டு தெய்வ மணம் வீசும் வாசகமாக நமக்கு அருளித் தந்துள்ளார்.

அருளாளர்களுடையசித்தமெல்லாம் தெய்வமாகிய காரணத்தினால் அவர்கள் புறத்தே தெய்வீகக் காட்சியில் ஈடுபடும்பொழுது தங்கள் கருவி கரணங்களைத் தம் வசமே ஒடுக்கிச் சிவத்தை நோக்கிச் செலுத்தி இன்பம் அடைகின்றார்கள். அவர்களுடைய உள்ளத்திலே இறை அனுபவம் நிரம்பி நிற்க மற்றவர்கள் மனதிலே படியாத புறக்காட்சிகள் அருளாளர்களுடைய உள்ளத்திலே மாறிலா மகிழ்ச்சியை தந்துவிடும்.

''ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்''.
(பெரியபுராணம்)

இறை அனுபவத்தால் மெய்ஞ்ஞானம் கிட்டுகிறது. மெய்ஞ்ஞானமாவது எல்லா ஞானங்களையும் தன்னுள் அடக்கியுள்ள சிவபரம் பொருளைப் பற்றிய பரஞானமாகும். திருவருளால்உயிர்மெய்ஞ்ஞானம்பெற்றவுடன், மெய்ஞ்ஞான நிறைவில் ஒப்பற்ற சிவானந்தத்தை அனுபவிக்கின்றது. சிவபரம்பொருளோடு ஒன்றி நிற்கும் அனுபவமே சிவானந்த அனுபவமாகும். இது உள்ளத்திலே எழுவது. ஆனாலும் இதனால் வரும் பெறுமகிழ்ச்சி கருவி கரணங்களிலே நிரம்பி வழிந்தோடுகிறது. கருவி கரணங்கள் அவற்றால் பாதிக்கப்படுகின்றன. இறைவனுடைய பெரும் கருணை அருளாளர்களுடைய ஐம்பொறிகளின் செய்கைகளில் வெளிப்படுகிறது. கண்கள் களிப்படைகின்றன. வாய் இன்னிசை பாடுகின்றது. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் மழை பொழிகின்றது. மனதிலே இறைவனைப் பற்றியே நினைப்பு. உடல் ஆனந்தக் கூத்தாடுகின்றது. திருஞான சம்பந்தருக்கு இந்த நிலை திருச்சிற்றம்பலத்திலே ஏற்படுகின்றது. பெருமானார் அதனைக் கண்டு வியக்கின்றார். இறைவனுடைய ஒப்பற்ற கருணையைப் போற்றுகின்றார். ''எம் பெருமானே! சிவபோகம் என்பது என் உள்ளே நேருகின்றது. அந்த அனுபவத்தை ஐம்பொறிகளின் அளவிலேயும் எளிதில் வரும்படி அருளினாயே. உன் பெரும் கருணையை எவ்வளவு போற்றினாலும் போதாதே'' என்பார்.

''அண்ண லார்தமக்கு அளித்தமெய்ஞ் ஞானமே
யான அம்பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்துஎழும் ஆனந்த
ஒருபெருந் திருக்கூத்துங்

கண்ணின்முன்புறக்கண்டுகும்பிட்டு அகக்களிப்
பொடும் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார்
புனிதரா டியபொற்பு.

(திருத்தொண்டர்புராணம் 2058)

''உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை
யொழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி யளவிலும் வெளிவர
அருளினை'' யெனப் போற்றி
இணையில் வன்பெருங் கருணையேயேத்தி,
முன்னெடுத்த சொற்பதிகத்தில்
புணரு மின்னிசை பாடின ராடினர்
பொழிந்தனர் விழிமாரி;

(திருத்தொண்டர்புராணம் 2059)

சிவானந்தத்தைப்பற்றிப் பேசுகின்றோம். அதைப் பெற்ற அருளாளர்களின் நிலை என்ன என்று ஓரளவு விளக்கலாம். ஆனால் சிவானந்தம் இத்தகையது என்று நம்மால் சொல்ல முடியாது. வேண்டுமானால் யாவற்றினும் மேம்பட்ட இன்பம் என்று மட்டுமே சொல்லலாம். சிவானந்தம் தனக்கு மேல் சிறந்தது ஒன்று இல்லாத பேரின்பமாகும் என்றும் ஒப்புக் கொள்ளலாம். அது அனுபவித்தவர்களுக்கே தெரியும். ''எங்ஙன் இருந்ததென்று எவ் வண்ணஞ் சொல்லுகேன் அங்ஙன் இருந்த தென்று உந்தீபற'' என்கிறது திருவுந்தியார். இதனைப் ''பேச்சற்ற பேரின்பம்'' என்பார் திருமூலர். இறைவனுடைய பெரும் கருணையால் அவனுடைய அருட்கடலில் மூழ்கினோம். எல்லாவித பாசத் தொடர்புகளைக் களைந்து கொண்டோம். மாயையிலிருந்து விலகிக்கொண்டோம். இறைவனுடைய பேரருள் உண்மையைப் புகட்டிச்செயலற்று இருக்கும்படி செய்து விட்டது. இதுவே சோதனையாகும் என்கிறார் திருமூலர்.

''பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
தம்மா னடிதந் தருட்கடல் ஆடினோம்
எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே.''

(திருமந்திரம்...2635)

உள்ளத் தூய்மையில் இறைவனுடன் ஒன்றியிருந்து, ஒப்பிலாத ஆனந்தம் பெற்று ''செப்பு அறிய சிவம் கண்டு தான் தெளிந்து'' இறையுணர்வாளர்கள் சிவமாகவே விளங்கிநிற்பர். ஒருவர் நமக்கு உதவி செய்தால் அவருக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம். அனுபூதிமான்கள் இறைவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகின்றார்கள்? அதற்கு ஒரேவழிதான் உண்டு என்பதையும் உணருகிறார்கள். தங்களை இறைவனுக்கே அர்ப்பணித்து விடுகின்றார்கள். அவனன்றி வேறில்லை என்கிற உணர்வில் தமது உடல், பொருள், ஆவி, உடைமை யாவற்றையும் இறைவனுடைய திருவடிகளிலே காணிக்கையாகச் செலுத்திவிடுகின்றார்கள். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் இறைவனுக்கு அடிமைகளாகிறார்கள். அவனுக்கு ஆளாய் விடுகிறார்கள். தங்களுக்கென்று ஒரு உரிமையும் இல்லை என்பதை உள்ளத்தில் தெரிந்து கொள்கின்றார்கள். எல்லாம் அவன் அருளால் நடக்கின்றது. எல்லாம் அவனுடைய உடைமைகள் என்கிற உணர்வு சிவபோகத்தில் ஏற்படுகிறது. இந்த உலகில் ஒருவரும் மற்றொருவருக்கு அடிமையாகச் செல்ல விரும்புவதில்லை. அடிமையாவதில்லை. நிர்ப்பந்தத்தால் அடிமையாக்கப்படலாம். ஆனால், மெய்ஞ்ஞானம் பெற்ற அனுபூதிமான்கள் இறைவனுக்கு அடிமையாவதைத் தவிர வேறு வழி இல்லை என்கிற ஒப்பற்ற நிலைக்கு வந்துவிடுகிறார்கள். அந்த எண்ணமே அவர்களுக்கு பேரானந்தத்தைக் கொடுக்கின்றது. தங்கள் நினைப்பெல்லாம் இறைவன்பால், தங்கள் செய்கையெல்லாம் இறைவனுக்கு இனியவை, தங்கள் உணர்வெல்லாம் இறைவனுக்குக் காணிக்கை என்று அருளாளர்கள் தங்களை இறைவனுக்கு உடைமையாக்கிக் கொள்கின்றார்கள். இந்த நிலையை அவர்கள் தாமாகவே விரும்பிப் பெற்றுச் சொல்லொணா இன்பம் அடைகின்றார்கள். இறைவனை அனுபவித்தோம் என்பது மட்டும் அவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதில்லை. இறைவனுக்கு ஆட்பட்டோம். அடிமையானோம் என்கிற நினைப்பு பன்மடங்கு அதிகமாகவே ஆனந்தத்தைத் தருகிறது. அடிமை என்றால் இன்று நேற்று அல்ல. மெய்ஞ்ஞானம் பெற்ற அடியார்கள் பன்னெடுங்காலம் தங்களுடைய உயிர் இறைவனோடு பிணைக்கப்பட்டிருக்கின்றதுஎன்பதைக் கண்டறிந்தார்கள். அந்த உண்மைத் தொடர்பு மாயையால் மறைக்கப்படுகிறது. மாயை நீங்கியவுடன் இறைவனால் ஆட்கொள்ளப் பட்டமை உள்ளத்திலே பளிச்செனப் புலப்படுகிறது. ஊழிதோர் ஊழி உயிரானது உலகில் பிறப்பெடுத்து, கன்ம பலன்களை அனுபவித்து இறைவன் திருவடிகளைச் சேரும் வரை இறைவனின் திருவருளே உயிரை நடாத்திச் செல்லுகின்றது என்கிற ஞானமே உயிரினை இறைவனுக்கு அடிமையாக்கி விடுகின்றது. இறைவனுக்கு நாம் எல்லோரும் கட்டுப்பட்டவர்கள்;

தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொண்டதில் அந்தம் ஒன்றும் இல்லா ஆனந்தம் பெறுகிறார் மணிவாசகப் பெருமான். அதை அவர் ஒப்புக்கொள்கிறார். உடனே அவருடைய மனதில் ஒரு எண்ணம் தோன்றுகிறது. ''நான் என்னை உனக்குக் கொடுத்தேன். நீயோ உன்னையே எனக்குக் கொடுத்துவிட்டாயே! சங்கரா! நம்மில் யார் சாமர்த்தியசாலி?


''தந்தது உந்தன்னை; கொண்டது என்தன்னை
சங்கரா: ஆர்கொலோ, சதுரர்?
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாது நீ பெற்றது ஒன்று, என்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எந்தையே! ஈசா உடல் இடம் கொண்டாய்;
யான் இதற்கு இலன், ஓர் கைம்மாறே!''

(திருவாசகம்)

ஒப்பற்ற அருளாளரான மணிவாசகர் தம் திருவாக்கு இந்தப் பூவுலகில் வாழும் எல்லா மக்களின் உள்ளங்களில் இறைவன்பால் எழும் நன்றி உணர்விற்கு இலக்கணமாக அமைகின்றது.

(தொடரும்)


தவக்கோலம் பூணும் அர்ச்சுனன் தருமரிடம் விடை பெற்றுக், காண்டீபத்தையும் கையுடன் கொண்டு, கயிலை மலைக்குப் புறப்படுகி-றான்.
அநேக நாட்கள் பயணம் செய்து, அநேக காடுமலைகள் கடந்து கயிலைக்கு வந்து சேருகிறான் அர்ச்சுனன். எங்கும் தவசிகள் தவம் புரியக் காணும் அர்ச்சுனன் அளவிலாப் பேரானந்தம் அடைகிறான்.
கதை வடிவம்
செவ்வேள்
படம்
M.N.ராஜா
தனி ஒரு இடத்தைத் தேர்வு செய்து, தன் ஒரு காலை நிலத்தில் ஊன்றி, மற்றொரு காலை நிற்கும் காலின் தொடைமேல் வைத்து, தலைக்குமேல் தன்னிரு கரங்களையும் உயர்த்தி ஐம்புலன்களைப் பரம் பொருள் நினைவில் ஒன்று படுத்தி, பஞ்சாட்சரத்தைச் செபித்து, முன் கங்கையைப் பூமிக்கு வரவழைக்கக் கடுந்தவம் புரிந்த பகீரதனுக்கு ஒப்பாக அருந்தவம் புரிகிறான் அர்ச்சுனன்.
தேவலோகத்தில் தேவேந்திரன்...
தேவமாதர்களே நீங்கள் போய் அர்ச்சுனன் தவ நிலையைக் கண்டுவந்து கூறுங்கள்.
அப்படியே செய்கி-றோம்
ஊர்வசி, அரம்பை, மேனகை, திலோத்-தமை ஆகியோர் அர்ச்சுனன் முன்பாக வந்து தத்தம் கைவளையல்கள் ஒலிக்கப், பந்த-டித்தும், பாடல் இசைத்தும் ஆடல்புரிந்தும் அர்ச்சுனன் தவத்தைக் கலைக்க முயல்கிறார்கள்.
அவர்களுக்குத்துணையாக மன்மதனும் தன் கரும்பு வில்லுடன் அங்குவந்து அசோகு, முல்லை, மா, தாமரை, குவளை ஆகிய ஐந்து மலர்க்கணைகளை அர்ச்சுனன் மீது தொடுக்கிறான்.


பஞ்சாக்கினியின் நடுவில் நின்று அர்ச்சுனன் ஆற்றும் கடும்தவத்தைக் கலைக்க இயலாத தேவமாதரும், மன்மதனும் தேவேந்திரனிடம் சென்று தங்கள் தோல்வியைக் கூறுகிறார்கள்.
தானே முனிவர் போல் வேடம் பூண்டு அர்ச்சுனன் இருக்கும் இடம் வருகிறான் இந்திரன்.
அரு மறைகளுக்கும் எட்டாத சிவபெருமான் உனக்கு ஒருநாளும் காட்சி தரப்போவதில்லை தவத்தைக் கைவிடு
என் உயிர் நீங்கினாலும், நான் என் தவத்தைக் கைவிடமாட்டேன்.
மகனே! மெச்சினேன் உன் தவத்தை. மகாதேவர் உமாதேவியோடு எழுந்தருளி உனக்கு அருள் புரிவது திண்ணம்
அத்தினாபுரத்தில் துரியோதனன்......
மாமா! பாசுபதாஸ்திரம் பெறப் பார்த்தன் கயிலையில் தவம் புரிகிறானாம். இப்பொழுது என்ன செய்வது?
கலங்காதே துரியோதனா! உன் நண்பன் மூகாசுரனைக் கூப்பிடு
துரியோதனன் சேதி அனுப்ப மூகாசுரன் விரைந்துவந்து துரியோதனனைத் தழுவிக் கொள்கிறான்
அருமை நண்பா! மூகா! அர்ச்சுனனை நீ எமலோகம் அனுப்ப வேண்டும்.
காரியம் முடிந்ததாகவே எண்ணிக் கொள். இப்போதே நான் புறப்படுகிறேன் கயிலைக்கு.
கயிலைக்கு வந்து சேரும் மூகாசுரன் ஒரு கோரக் காட்டுப் பன்றியின் வடிவு கொண்டு அர்ச்சுனனைத் தேடிச் செல்கிறான்.




**டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்**

## [42]

தூதர்கள் மனோவேகமாய் வடக்குக் கடலில் உள்ள ஆசுர நகரம் சென்று சிங்க முகனை தொழுது நிகழ்ந்தவற்றை எல்லாம் கூறி சூரபன்மனின் கட்டளையையும் தெரிவித் தார்கள். அவற்றைக் கேட்ட சிங்கமுகன் பொங்கியெழுந்தான்; தூதர்களை நோக்கி, ''எனது சேனைகளைத் திரட்டிக் கொண்டு வாருங்கள்'' என்று உத்தரவிட்டான். அதன் படி நால்வகைச் சேனைகளும் விரைந்து வந்து அவனைச் சூழ்ந்தன. சேனாதிபதிகளும் வீரர் களும் சூழச் சிங்கமுகன் தேர் ஏறி வீரமகேந்திர புரம் புறப்பட்டான். ஒரு நாழிகைப் பொழுதுக் குள் விண் வழியாக வீரமகேந்திரபுரம் வந்த டைந்தான். மாபெரும் வீரனாகிய அவனது வருகையைக் கண்ட தேவர்கள் அச்சத்தினால் கலக்கமடைந்தனர்.

கந்தபுராணத்தில் சிங்கமுகன் வதம் ஒரு சிறந்த பகுதி, சிங்கமுகனுக்கு ஆயிரம் தலைகள், இரண்டாயிரம் கைகள்;

சூரன் முற்றிலும் தீயவன், சிங்கமுக னுக்கோ நீதி தெரியும். ஆனால் அதைக் கையாள முடியவில்லை. பாவம் என்று தெரிந் தும் அந்தச் செயலையே செய்வான். முருகப் பெருமான் பிரபாவங்களைச் சூரபன்ம னிடம் சிங்கமுகனைப் போல் வேறு எவரும் எடுத்துச் சொல்லவில்லை. அவ்வளவு எடுத்துச் சொல்லியும் பயனில்லாமல் போகவே அவனே முருகனிடம் போருக்குத் தயாராகி வந்துவிட் டான்.

சூரபன்மருக்கு உற்ற துணையாக இருந்த வர்கள் எல்லோரும் அழிந்துவிட்டார்கள். சிங்கமுகன் மட்டுமே உயிரோடு இப்போது இருக்கிறான். நால்வகைச் சேனைகளோடும் அவன் வீரமகேந்திரபுரம் வந்து சூரபன்மனை விரைவில் அடைந்து அவனது காலில் அடியற்ற மரம்போல் விழுந்தான். ''தம்பி!'' என்று துன்பமும் அன்பும் ஒழுக அழைத்து அவனை ஆசனத்தில் அமர வைத்தான் சூரபன்மன்.

''அண்ணா! தூதர்கள் எல்லாவற்றையும் சொன்னார்கள். மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் எட்டாத முழு முதற்கடவுளைப் பாலகன் என்று எண்ணிவிட்டீர்கள். என் பேச்சையும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. தானாகவும் தெரியாமல், பிறர் சொல்லியும் கேளாமல் கெட்டீர்களே'' என்று துக்கப்பட்டுச் சொன்னான் சிங்கமுகன்.

''மூலமும் முடிவுமில்லாத மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை படுவ
தோர்ந்திலை
ஆலம தானதோஐய என்மொழி
மேலையின் விதியையார் வெல்லும் நீரினார்.''

''அண்ணா! வெள்ளம் வந்த பின் அணை போடுவதில் பயனில்லை. முன் வினையை யாரால் வெல்ல முடியும்? நான் அதிகம் பேச வில்லை. போருக்குப் போகிறேன். ஆனால் திரும்பி வரமாட்டேன். வேலாயுதத்திடம் சென்று யார் திரும்ப முடியும்? நீங்களாவது அழியாமல் இருக்க வேண்டும். தேவர்களைச் சிறையிலிருந்து விட்டுவிடுங்கள்.'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டான் சிங்கமுகன்.

மகேந்திரபுரியிலுள்ள தன் மாளிகையைச் சென்றடைந்த சிங்கமுகன் அன்ன மலைகளை யும், மாமிசக் குன்றுகளையும், பால், தயிர், நெய், கள், இரத்த ஏரிகளையும் தின்று குடித்து போர்க் கோலம் பூண்டான். பத்து லட்சம் குதிரைகளைப் பூட்டிய தேரில் ஏறி, மந்திரி களும் மைந்தரும் இலட்சம் வெள்ளம் சேனை களும் சூழப் போர்க்களத்துக்குச் சென்றான்.

சிங்கமுகாசுரன் போருக்குச் செல்வதை யறிந்த நான்முகன், இந்திரன் திருமால் முதலிய வானவர்கள் பயந்து பாசறைக்கு விரைந்தனர். திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் கந்தக் கடவுளைத் தொழுது, ''ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையும் உடைய சிங்க முகாசுரன் போருக்கு வருகிறான். அவன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்றவன். ஆயிரம் யோசனை உயரமுள்ளவன். அளவில் லாத வரம் பெற்றவன். பூமியை ஒரு கையால் தாங்கவல்லவன். வீரத்தில் மட்டுமின்றி வஞ் சனையிலும் மாயையிலும் வல்லவன். மேரு மலையைத் தண்டாயுதம்போல் எடுத்து அண்ட கடாசத்தை அடித்தவன். சூரபன்மனுக்கு தம்பி யான இவன் எண்ணற்ற சேனைகளோடு வரு கிறான். அவனைக் கொன்று எங்களைக் காத் தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண் டார்கள்.

வானவர் வேண்டுகோளைச் செவிமடுத் தார் கந்தக் கடவுள், வாயுதேவனை அழைத்து ''நம்முடைய தேரைக் கொண்டு வா'' என்று பணித்தார். பெருமானே போருக்குப் புறப்பட எண்ணிவிட்டார் என்பது புலனாயிற்று. அது



அவரது கௌரவத்துக்கு ஆகாது. சூரன் மீண்டும் போருக்கு வருமளவும் பெருமான் வர வேண்டியதில்லை எனக் கருதினார் வீரவாகு தேவர். முருகவேளைப் பணிந்து, ''எம்பெருமானே, வந்திருப்பவனோ சூரபன்மனின் தம்பி தான். நான் சுப்பிரமணியரின் தம்பி, தம்பி மீது தம்பியை போருக்கு அனுப்புங்கள் நம்பி'' என்று வேண்டிக் கொண்டார்.

''சிங்கமுகாசுரன் எதிரில் நிற்கக்கூட உனக்கு ஆற்றல் இல்லை'' என்று சொல்லாமலே எம்பெருமான் திருவுள்ளத்தில் சிரித்துக் கொண்டு, ''நல்லது சேனைகளுடன் முன்னே செல்வாயாக'' என்று கூறியருளினார்.

தம் மாளிகைக்குச் சென்ற வீரவாகுதேவர் போர்க்கோலம் பூண்டு இலக்கத் தெண்மரும் ஆயிரம் வெள்ளம் பூதப் படைகளும் சூழப் போர்க்களத்தை யடைந்தார். போர்க்களத்தில் பூதப்படைகளும் அவுணப் படைகளும் போரைத் தொடங்கின.

அவுணப் படையினரின் வீராவேசத் தாக்குதலால் பூதப் படையினர் நிலைகுலைந்தனர். பூத சேனைகளின் நிலையைக் கண்ட சிங்கன் என்னும் பூத சேனாதிபதி ஒரு தண்டத்தை எடுத்து ஆத்திரத்துடன் அவுணர் படையைத் தாக்கினார். சிங்கனுக்கு எதிராக அவுணப் படையைச் சேர்ந்த தசமுகன் என்பவன் வில்லை எடுத்து மழைபோல் பாணங்களை பொழிந்தான். அந்தப் பாணங்களையெல்லாம் சிங்கன் தண்டத்தால் அடித்து நொறுக்கினான். பின்னர் அதே தண்டத்தால் தசமுகன் அணிந்திருந்த கவசத்தையும் அழித்தான். கவசத்தை இழந்த தசமுகன் ஒரு தண்டத்தை எடுத்துச் சிங்கன்மீது வீசி யெறிந்தான். அந்தத் தண்டம் சிங்கன் மார்பில் பட்டதும் ஒடிந்தது. அதனை கண்டு ஆத்திரமடைந்த தசமுகன் ஒருமழுவைச் சிங்கன் மீது எறிந்தான். அந்த மழுவை ஒரு தண்டினால் அடித்து வீழ்த்திய சிங்கன், அதே தண்டினால் தசமுகனின் வில்லை ஒடித்துத் தூளாக்கினான். தசமுகன் நெருப்புருவமாகிய வேல் ஒன்றைச் சிங்கனுக்கு எதிராகச் செலுத்தினான். சிங்கன் சக்கரப் படையை விடுத்துஅந்த வேற்படையை அழித்தான். அதைக் கண்ட தசமுகன் ஒரு தண்டத்தை யெடுத்துச் சிங்கனின் மார்பை நோக்கி எறிந்தான். அந்தத் தண்டம் சிங்கனின் மார்பில் பாய்ந்தது. உதிரம் பொங்கியது. சிங்கன் கோபாவேசத்துடன் தசமுகனின் மார்பில் ஓங்கி அறைந்தான். அந்த அறை தசமுகனின் உயிரை மாய்த்தது.

பூத சேனையை சேர்ந்த அநகன் அற்புதமான போர்த்திறனைக் காட்டி அவுண சேனைகளை நிலைகுலைய ஓடச் செய்தான். துன்முகன் அவர்களைத் தடுத்து நிறுத்தி ''வீரர்களே! இந்தப் பாணங்களைக் கண்டு நீங்கள் ஓடலாமா? என்றைக்காவது சூரியனை மின்மினிப் பூச்சிகள் வெற்றிக்கொள்ள முடியுமா? என்னை நம்பிப் போரைத் தொடருங்கள்'' என்று ஊக்கமளித்தான். தனது வில்லை வளைத்துப் பாணங்களைப் பூதர்கள் மீது

பொழிந்தான். அது பயனளிக்காதது கண்டு நூறு நூறு மாய வடிவங் கொண்டு ஒவ்வொரு பூதரையும் தாக்கினான்.

வீரவாகுதேவர் அவனுடைய மாய வடிவங்களை ஞானப் படையால் அழித்தார். அவுணர் படை யாவும் ஓட்டம் பிடிக்கத் தனித்து நின்றிருந்த துன்முகனின் வில்லையும் பாணங்களையும் கவசங்களையும் வீரவாகு தேவர் அழித்து விட்டார். 'இனி இவர்களுடன் போர் செய்தால் இறப்பது திண்ணம். ஆகவே ஒளிந்து கொள்வதே பிழைக்க வழி'' என்று கருதி ஒரு மந்திரத்தைஉச்சரித்தான் துன்முகன். மந்திர மகிமையால் விண்ணில் மறைந்தான். ''ஓடி ஒளிந்த அவனை விரைந்து சென்று பிடிப்போம்; வாருங்கள்'' என்று பூதர்கள் கூறினார்கள். வீரவாகுதேவர் ''யுத்தத்துக்குப் பயந்து ஓடியவர்களையும் சரணடைந்தவர்களையும் கொல்லுதல் தகாது'' என்று நீதி கூறினார். பூத சேனைகள் அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தன.

அவுணப் படை வீரர்கள் தோற்று நாலா திசைகளிலும் ஓடுவதை கண்ட சிங்கமுகாசுரன் முன்னணிக்கு வந்தான், பூதர்கள் அவன்முன்கூடி மலைகளையும் மழுக்களையும், தண்டங்களையும் எழுப்படைகளையும் வீசிப் போரிட்டார்கள். சிங்கமுகாசுரன் அவற்றை நோக்கிப் பெருமூச்சு விட்டான், அவ்வளவுதான். பூதர்கள் சண்ட மாருதத்தில் அகப்பட்ட பூளைப் பூக்கள் போல் போயினர்.

பூத வீரர்கள் மீண்டும் தைரியத்தைத் தருவித்துக் கொண்டு சிங்கமுகாசுரனை எதிர்த்துப் போர் செய்தார்கள். சிங்கமுகாசுரன் தேரை விட்டு இறங்கி பூதர்களில் சிலரைக் கீழே எறிந்தான்; சிலரை விண்ணில் எறிந்தான்; சிலரைப் பரம உலகில் எறிந்தான். சிலரை விஷ்ணு உலகில் வீசினான்; சிலரை நிலமெங்கும் வீசினான்; சிலரை கடலில் எறிந்தான். சிலரை மிதித்தான். சிலரைக் கசக்கினான்; சிலரை அரைத்தான்; சிலரைத் தின்றான்; சிலரை நிலத்தில் வைத்துத் தேய்த்தான். சிலரை வெட்டினான். இப்படியாகச் சிங்கமுகாசுரன் கணப்பொழுதில் கண்ட கண்டபடி பூதவீரர்களைக் கண்ட துண்டமாக்கிக் கொன்று குவித்ததால் எங்கும் உதிர வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அது கடலில் கலந்து கடலையே செந்நிறமாக்கியது.

அழற்கண்ணர் என்ற வீரர் சிங்கமுகாசுரன் மீது பல கணைகளை விடுத்தார். அந்தக் கணைகள் அவரது மார்பில் பட்டதும் முனை மழுங்கி முறிந்து விழுந்தன. அழற்கண்ணர் வடவாமுகாக்கினி போல் சிவந்து ஒரு சூலப் படையைச் சிங்கமுகாசுரன் மீது எறிந்தார். அந்தச் சூலம் சிங்கமுகாசுரன் மீது பட்டதும் மலையில் பட்ட முள்ளைப்போல் ஒடிந்து விழுந்தது. சிங்கமுகாசுரனின் வலிமையைக் கண்டு வியந்த அழற்கண்ணர் ஒரு தண்டத்தை எடுத்து அவன் மீது எறிந்தார். அது சிங்கமுகாசுரனின் தேர்ப்பாகனின் தலையைச் சிதறடித்தது. அதனைக் கண்டு சிவந்த சிங்கமுகாசுரன் தண்டாயுதத்தை எறிந்தான். அது அழற்கண்ணரின் மார்பைப் பிளக்க உதிர வெள்ளம் பெருகியது. அவர் மூர்ச்சித்தார். சிங்கமுகன் வேறொரு தேர்ப்பாகனைத் தம் தேரில் அமர்த்திக் கொண்டு பூத வீரர்களின் மீது போர் செய்யப் புறப்பட்டான்.

சிங்கமுகாசுரன் போர் செய்ய வருவதைப் பூதப்படையைச் சேர்ந்த சுமாலி என்பவன் கண்டான். உடனே அவன் மேரு மலையைப் போன்ற ஒரு மலையைப் பெயர்த்து வீசி ஆரவாரம் செய்தான். அந்தப் பெரிய மலையைச் சிங்கமுகாசுரன் பந்துபோல் ஒரு கையால் பிடித்துச் சுமாலி மீதினில் திருப்பியெறிந்தான். அதனால் சுமாலி உணர்விழந்து, செயலழிந்து நிலத்தில் விழுந்தான்.

அடுத்து, தண்டி என்பவன் தண்டை ஏந்திச் சிங்கமுகாசுரனுடன் சண்டை செய்தான். சிங்கமுகன் அழியவில்லை; தண்டாயுதம்தான் அழிந்தது. சிங்கமுகன் தண்டியைக் காலினால் உந்தி வானவர்களும் அஞ்சும்படி ஆரவாரம் செய்து விண்ணில் வீசியெறிந்தான். விண்ணிற் சென்ற தண்டி திரும்பி வந்து சிங்கமுகாசுரனின் இரண்டாயிரம் தோள்களின் மீது குதித்தான். சோலைகளில் பாயும் குரங்கு போல் அவன் தோள்களில் குதித்துத் திரிந்தான். சிங்கமுகனோ தனது தோள்களில், ''ஓர் ஈ உலவுகின்றது'' என்ற அளவுக்கே எண்ணி ஒரு கையால் சொறிந்து தண்டியை உருட்டித் துடைத்துவிட்டான். தண்டி செயலற்றுப் போனான். பூதர்கள் யாவரும் பயந்து ஓடினார்கள்.

அவர்களை ஊக்குவான் வேண்டி இலக்கத் தெட்டு வீரர்களும், சிங்கமுகாசுரனுக்கு முன்னே தேரைச் செலுத்திக் கொண்டு வந்து சூழ்ந்து கணைகளைப் பொழிந்தார்கள். சிங்கமுகாசுரன் தேரினின்றும் கீழே இறங்கிச்சென்று இடிபோன்ற பெரு முழக்கத்துடன் இலக்கத் தெண்மரின் தேர்களில் சிலவற்றைத் தூக்கி எறிந்தான். அவர்களது தேர்களிலேயே சிலவற்றை எடுத்து மற்றவற்றோடு மோதும்படி அடித்து நொறுக்கினான். இலக்கத் தெண்மரும் வலிமை இழந்து ஓடினார்கள். சிங்கமுகாசுரன் தனது தேரில் வெற்றி வீரனாக ஏறிக் கொண்டான்.

வீரவாகுதேவர், கோபத்துடன் தேரைச் செலுத்திக் கொண்டு சிங்கமுகாசுரன் முன்பு வந்தார். பெரிய வில்லை வளைத்துப் பல கோடி பாணங்களைப் பொழிந்தார். எதிர்த்து வந்த அவுணர்கள் தலை சிதறின; வெட்டுண்ட மற்ற அவுணர்கள் மடிந்ததால் எங்கு நோக்கினும் பிண மலையே காட்சி அளித்தது. அம்மலைகளைச் சுற்றிப் பேய்கள் சுற்றிக் கொண்டிருந்தன. இறந்த அவுணர்களின் உடலினின்றும் பெருக்கெடுத்தோடிய உதிர வெள்ளம் இறவாமல் நின்றிருந்த அவுணர்களை அடித்துச் சென்று கடலில் கொண்டுபோய் சேர்த்தது.

இதனைக் கண்ட சிங்கமுகாசுரனின் மக்களாகிய சதவீரர்களுக்குச் சினம் பொங்கியது. கணைகளை மழையென வீரவாகுதேவர் மீது பொழிந்தனர். அவற்றை எல்லாம் தனது

கணைகளால் மாற்றினார் வீரவாகுதேவர். வீரவாகு தேவரை விற்போரில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த சதவீரர்கள் வாட்போர் தொடங்கினர். சிவபெருமான் தந்தருளிய வாளுடன் வீரவாகு அவர்கள் மீது பாய்ந்தார். சதவீரர்கள் அங்கம் அங்கமாகக் குறிபார்த்து வீசிய வாள் படையினாலும் வீரவாகு தேவருக்குத் தீங்கு எதுவும் ஏற்படவில்லை. உடனே அவர்கள் கூட்டமாகச் சென்று வீரவாகு தேவரைப் பிடித்துக் கொண்டார்கள். அதனால் ஆத்திரமடைந்த வீரவாகு தேவர் தமது வாள் படையினால் சதவீரர்களின் உடலைப் பலவாறாக வெட்டிக் கொன்று குவித்தார். சதவீரர்களைக் கொன்ற பின் தேரில் ஏறிக் கொண்டார் வீரவாகு தேவர்.

தமது புதல்வர்களான சதவீரர்கள் இறந்ததைக் கண்ட சிங்கமுகாசுரன் பெரும் துன்பத்தில் ஆழ்ந்தான்.

இதன் பிறகு சிங்கமுகனும் வீரவாகுவும் நேருக்கு நேர் சந்தித்தனர். வீரவாகுதேவரை ஏற இறங்கப் பார்த்தான் சிங்கமுகாசுரன். அவனது கண்கள் தீயைக் கக்கின. ''உ..ம்'' சிவகுமாரன் என்றால் ஆறுமுகங்கள் இருக்கும். உனக்கு ஆறு முகங்கள் இல்லை. ஒரே முகம் உடைய நீ சிவகுமாரன் அன்று. நீ யார்? எண்மர்களில் ஒருவனோ? இலக்கம் வீரர்களின் தலைவனோ? நீதான் முன்பு நமது ஊருக்கு வந்த தூதனோ? யார் சொல்'' என்றான்.

சிங்கமுகனின் கேள்விக்கு பதில் கூறினார் வீரவாகுதேவர்.

''சிவகுமாரராகிய முருகப் பெருமானின் அடிமை நான். முன்பு உங்களது மகேந்திர புரிக்குத் தூதனாய் வந்து முருகப் பெருமானின் அருளினால் நகரத்தை அழித்துத் திரும்பிச் சென்றவன் நானேதான். ஆறுமுக சுவாமியின் கிருபையால் அளவற்ற அவுணர்களைக் கணப்பொழுதில் அழித்த நான் உன்னையும் கொல்வதற்காக அவரது அநுக்கிரகத்தைப் பிரார்த்தித்து இங்கு வந்து நிற்கிறேன். என் பெயர் வீரவாகு'' என்று கூறினார்.

(தொடரும்)




நூல் பெயர் : அப்பர் விருந்து

நூலாசிரியர் : தவத்திரு குன்றக்குடி அடிகள்

வெளியீடு: கலைவாணி புத்தகாலயம்
158, உஸ்மான் ரோடு,
தி. நகர். சென்னை-17.

பக்ககங்கள் : 160 விலை : ரூ. 20.00

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று உழவாரப் பணி புரிந்து உலகு உய்ய வாழ்ந்த அப்பரடிகளின் அருமை பெருமைகளை 26 அரிய கட்டுரைகளில் மிகச் சிறப்பாக வகுத்தும், விரித்தும் விவரிக்கிறார் அப்பரடிகளின் வழிவந்த அருளாளரான தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

ஆழமான பொருளை, இனிய எளிய நடையில் விவரிப்பது அடிகளார் பாணி:

''கங்கை ஆற்றில் மீன் எப்போதும்தான் கிடக்கிறது. காவிரியில் தவளை எப்போதும் தான் இருக்கிறது. அவற்றிற்கு ஞானம் வருகிறதா? கிடையாது.'' (பக். 42)

''நாம் நடக்கும்போது வலதுகாலை வைத்தவுடன் இடக்காலையும் சேர்த்து எடுத்து வைக்கிறோம்? நாம் நடந்து செல்ல வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டதும் எப்படி வலக்காலும் இடக்காலும் மாறி மாறித் தொடர்ந்து இயல்பாக வைக்கப் பெறுகின்றனவோ அப்படியே வாழ்க்கையில் தொண்டும் பக்தியும் மாறி மாறி இயல்பாக நடைபெற வேண்டும்.'' (பக். 53)

''உலகம் முழுவதும் ''அரசனின் ஆணை ஆண்டவனின் ஆணை'' என்ற கொள்கை இருந்தபொழுது தமிழ்நாட்டில் மக்களின் அடிப்படைச் சுதந்திரத்திற்கு முரணாக இருந்த முடியாட்சியை எதிர்த்துப் புரட்சி செய்த முதல் தலைவர் அப்பரடிகள்''. (பக். 153)

இத்தகைய அடிகளாரின் அரிய சிந்தனைகளைத் தாங்கி நிற்கும் இந்நூல், தமிழ் கூறு நல்லுலகம் போற்றி வரவேற்கத்தக்க நன்னூல் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

# திருஞானசம்பந்தர் பாடிய திருநெற்குன்றம்



இல. தியாகராஜன், எம்.ஏ., எம்.பில்..

### அமைவிடம்

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் புள்ளம்பாடி அருகே திண்ணகுளம் எனும் அழகிய சிற்றூர் உள்ளது. புள்ளம்பாடி -திருமழபாடி சாலையில் புள்ளம்பாடியிலிருந்து பத்துகிலோ மீட்டர் தொலைவிலுள்ள இவ்வூரை விரகாலூர் வழியாகச் சென்றடையலாம்.

கொள்ளிடஆற்றின் வடகரையில் அமைந்துள்ள இவ்வூரில் பசுமையான நெல் வயல்களும் தென்னந்தோப்புகளும் நிறைந்துள்ளன. இயற்கை எழிலரசி ஏகாந்த கொலுவிருக்கும் ஆற்றங்கரையோரம் ஸ்ரீகுந்தளாம்பிகை உடனுறை நெற்குன்ற நாதீசுவரர் எழுந்தருளும் சிவலாயம் அமைந்துள்ளது.

### தலச்சிறப்பு

இக்கோயிலின் எதிரில் இந்திர தீர்த்தம் எனும் திருக்குளம் உள்ளது. இத்தீர்த்தக் கரையில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து இந்திரன் கிளிவடிவத்தில் நெற்கதிர்களால் அர்ச்சனை செய்து வழிபட்டார் என்றும் இதனால் இறைவன் நெற்குன்றநாதர் எனத் திருநாமம் பெற்றார் என்பதும் தலவரலாறு.

### கோயில் அமைப்பு

இறைவன் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளவாறு கட்டப்பெற்றுள்ள இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளுடன்அமைந்துள்ளது.

மகாமண்டபத்தினையொட்டி வடபுறத்தில் ஸ்ரீகுந்தளாம்பிகையின் சன்னதி தெற்கு நோக்கி கட்டப்பட்டுள்ளது. அம்மன் சன்னதியின் முன் 12 கால் மண்டபமொன்று அமைக்கப்பட்டுள்ளது. உள் திருச்சுற்றில் விநாயகர், முருகர், சண்டிகேசுவரர் ஆகியோருக்கு தனி சன்னதிகள் உள்ளன. கற்றளியால் ஆன சண்டிகேசுவரர் சன்னதி தனிச்சிறப்புடையதாக திகழ்கிறது. இத்தகைய கற்றளியாலமைந்த சண்டிகேசுவரர் சிற்பங்களுடன் உள்ள கோயிலை திருவையாறு, கங்கைகொண்ட சோழபுரத்தில் காணலாம். பைரவர், சப்தமாதர் ஆகியோருக்கு சன்னதிகள் இல்லை. திருச்சுற்றின் வடகீழ் கீழ் மூலையில் நடராசர் சன்னதி உள்ளது. திருச்சுற்றின் வடபுறம் கிழக்கு நோக்கியபடி விஸ்வநாதர் சன்னதி சிறிய ஆலயமாக உள்ளது.

### சிற்பங்கள்

கருவறையின் வெளிச்சுவரிலமைந்துள்ளதேவ கோட்டங்களில் முறையே தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரி, பிரம்மா ஆகியோரும் அர்த்தமண்டபச்சுவர்களில் முறையே விநாயகர், துர்க்கை ஆகியோரும் எழில்மிக்க வார்ப்புகளாக படைக்கப்பட்டுள்ளனர். அம்மன் சன்னதி வாயிலின் வலப்பக்கத்தில் உள்ள பிட்சாடனர், திருச்சுற்று மாளிகையின் கீழ்புறத்திலுள்ள பைரவர், அர்த்தமண்டபவாயில், இராஜகோபுரவாயில் ஆகியவற்றைக் காத்து நிற்கும் துவாரபாலகர்கள், விசுவநாதராலயத்தின் முன் நிற்கும் அம்மன் சிற்பம் எனச் சிற்பங்கள் நிறைந்து வழியும் இக்கோயிலுனுள் நுழைந்தால் ஏதோ ஓர் சிற்ப அருங்காட்சி கூடத்தினுள் நுழைந்த உணர்வை நாம் பெறுகிறோம்.

### ஸ்ரீ விமானம்

உபானம் முதல் பிரஸ்தரம் வரை 11 அடி உயரத்துக்கு கருங்கல்லால் ஆன கருவறையின் மேல் சுதையாலும் செங்கல்லாலும் ஆன விமானம் கட்டப்பெற்றுள்ளது. உருண்டை வடிவிலான வேசர சிகரமுடைய இவ்விமானத்தை பல்வேறு சிற்பங்கள் பாங்குற அலங்கரிக்கின்றன.

### கல்வெட்டுகள்

இக்கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், அம்மன் சன்னதி வெளிச்சுவர்கள், உட்புற மண்டபச் சுவர்கள், தூண்கள், விசுவநாதர் சன்னதி சுவர்கள், இராஜகோபுர உட்சுவர், திண்ணைப்பகுதி, வெளிப்புற நிலைக்கால் ஆகிய இடங்களில் இருபதுக்கும் அதிகமான கல்வெட்டுகள் வரையப்பெற்றுள்ளன.

இவை முதலாம் இராசேந்திரன் (1012-1044), முதலாம் இராஜாதிராஜன்(1018-1054) இரண்டாம் இராசேந்திரன் (1052-1068) முதலாம் குலோத்துங்கன் (1070-1120) விக்கிரம சோழன் (1118-1135) இரண்டாம் இராஜாதிராஜன் (1163-1178) மூன்றாம் இராஜராஜன் (1216-1257) ஆகிய மன்னர் காலத்திலும் பிற்காலத்திலும் எழுதப்பெற்ற கல்வெட்டுகளாகும்.

### படியெடுக்கப்படாதவை

இக்கல்வெட்டுகள் அனைத்தும் இதுவரை நடுவணரசுக் கல்வெட்டுத்துறையால் படியெடுக்கப்படாதவை என்பதும் இவை இக்கட்டுரையாசிரியரால் முதன் முதலாக கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாறு

இக்கோயிலில் எழுதப்பெற்றுள்ள கல்வெட்டுகளில் மிகவும் தொன்மையானது முதலாம் இராசேந்திரசோழனின் 14-வது ஆண்டில் (கி.பி.1026) எழுதப் பெற்றதாகும். இது கருவறை மேற்குச் சுவர் முப்பட்டை குமுதப்பகுதியில் வரையப் பட்டுள்ளது. இதிலிருந்து இக்கோயில் கி.பி.1026க்கு சற்று முன்பு இன்றைக்கு 950 ஆண்டுக்குமுன் கட்டப்பட்டுவிட்டது என அறிகிறோம்.

இராசேந்திரனுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த சோழர் காலத் துண்டுகல்வெட்டொன்று கருவறை தென்சுவரில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து இவருடைய காலத்திற்கு முன்பு இங்குக் கோயில் இருந்தது எனவும் அதனை இவர் திருப்பணி செய்து கட்டியுள்ளார் எனவும் அறிய முடிகிறது.

கல்வெட்டுகள் ஊரின் பெயரை ''திருநெற்குன்றம்'' என்றும் கோயில் பெயரை ''திருநெற்குன்றமுடைய நாயனார்'' ''திருநெற்குன்றமுடைய மகாதேவர்'' என்றும் குறிப்பிடுகின்றன. மேலும் கல்வெட்டுகள் இவ்வூர் ''ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதிமங்கலம்'' எனும் பிரம்மதேயத்துள் அமைந்த ஊர் எனவும் கூறுகின்றன. மதுராந்தகன் என்பது முதலாம் இராசேந்திரசோழரின் இயற்பெயராகும். இவர் காலத்தில் இப்பிரமதேயம் இப்பெயருடன் விளங்கியுள்ளது.

பல்லவர் காலத்து ஊர்

ஆனால் திண்ணகுளமும் சுற்றியுள்ள ஊர்களும் பல்லவர்காலம் முதலே சிறப்புற்று விளங்கியது என கல்வெட்டுகள், இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். திண்ணகுளத்தின் அருகே மூன்று கிலோமீட்டர் தொலைவில் ஆலம்பாக்கம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரிற் பிறந்த உடன்பிறப்பினரான விசைய நல்லூழான், கம்பன் அரையன் என்போர் முறையே இரண்டாம் நந்திவர்மபல்லவன் (731-796) இவர் மகன் தந்திவர்ம பல்லவன் (796-846) ஆகிய மன்னர்களின் கீழ் அதிகாரிகளாக விளங்கினர். இதனை கி.பி. 791, 801 ஆகிய ஆண்டுகளில் வரையப்பெற்ற பட்டத்தாள் மங்கலச் செப்பேடும், திருவெள்ளறைக் கல்வெட்டும் கூறுகின்றன.

ஆலம்பாக்கமும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களும் இணைந்து பல்லவர்காலத்தில் 'தந்திவர்மமங்கலம்' என்ற பெயரில் பிரம்மதேயமாக விளங்கியது என ஆலம்பாக்கத்திலுள்ள கல்வெட்டுகளால் அறிகிறோம். இப்பெயரே முதலாம் இராசேந்திரன் காலத்தில் ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது எனவும் ஆலம்பாக்கத்துக் கல்வெட்டாலறிகிறோம்.

இந்த பிரம்மதேயத்தினுள் ஆலம்பாக்கம் திண்ணக்குளம், நத்தம், மாங்குடி, கோவண்டாகுறிச்சி ஆகிய ஊர்கள் இருந்தன. இங்கு கோயில்களும் கல்வெட்டுகளும் உள்ளன. திண்ணகுளம் கல்வெட்டுகள் ''ஸ்ரீமதுராந்தக சதுர்வேதிமங்கலத்து திருநெற்குன்றத்து திருநெற்குன்றமுடைய நாயனார்'' என்ற ஊரையும் கோயிலையும் குறிப்பிடுகின்றன.

ஆலம்பாக்கத்திலும் சுற்றி உள்ள ஊர்களிலும் பல்லவர் காலத்தில் கோயில்கள் இருந்திருக்கவேண்டும். ஆனால் அவை சோழர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டுவிட்டபடியால் பழைய பெயர் தவிர கட்டிடக் கூறுகள் அழிந்துவிட்டன. அதேபோன்று திண்ணக்குளத்திலும் இருந்த பல்லவர் காலத்துக் கோயில்கள் சோழர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிகிறது. இவ்வூரில் பல்லவர் காலத்தில் கோயில் இருந்தது என்பதற்கு சான்றாக இரண்டு அழகிய சிங்கமுகத்தூண்கள் உள்ளன. சிவன் கோயிலுக்கு சற்று தள்ளி மேற்கில் அமைந்துள்ள வரதராஜபெருமாள் கோயில் மண்டபத்தைத் தாங்கி நிற்கும் இத்தூண்கள் கலை அழகிலும் சிற்ப வடிவிலும் ஏனைய பல்லவர் காலத்துக் கோயிலில் உள்ள சிங்கமுகத் தூண்களை ஒத்துள்ளன். இவை கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு காலத்தவை ஆகும்.

இத்தூண்கள் இவ்வூரில் பல்லவர்காலத்திலிருந்த சிவன் கோயில் அல்லது பெருமாள் கோயில் திருச்சுற்று மாளிகைப்பகுதி அல்லது மண்டபப்பகுதியையோ அலங்கரித்தருந்தவையாகும். ஆனால் பிற்காலத்திருப்பணியில் அழிந்தவைபோக எஞ்சியுள்ளவை இத்தூண்கள் மட்டுமே ஆகும்.

சம்பந்தரின் பாடல்

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் ஆட்சிபுரிந்தவர் முதலாம் மகேந்திர வர்மபல்லவர் (591-630). இவர் காலத்தில் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் வாழ்ந்துள்ளனர்.

சம்பந்தர் தனது திருசேத்திரக் கோவையில் 9-வது பாடலில் ''நெற்குன்றமோத்தூர் நிறை நீர்மருக நெடுவாயில் குறும்பலா நீடு திருநற்குன்றம் வலம்புரந் நாகேச்சுரம்''

என்று பல ஊர்களைப் பாடுகிறார்.

இவற்றில் நெற்குன்றம் என்று பாடல் குறிப்பிடும் ஊர் எது என்பது இதுவரை கண்டறியப்படாமலேயே இருந்துள்ளது. ஆனால் இப்போது திண்ணகுளத்து நெற்குன்றநாதர் கோயில் கல்வெட்டுகள் இவ்வூரையும் கோயிலையும் ''திருநெற்குன்றத்து திருநெற்குன்றமுடையார்'' என்று குறிப்பிடுவதால் சம்பந்தரின் பாடல் பெற்ற கோயில் இதுவே என்பது தெளிவாகிறது.

ஆயினும் நெற்குன்றம் என்ற பெயரில் தொண்டை நாட்டில் பல ஊர்கள் உள்ளன. அவற்றில் ஏதேனும் ஓர் ஊரை ஏன் இப்பாடல் குறிப்பிடுவதாக கொள்ளக்கூடாது என்ற ஐயம்

எழுந்துள்ளது. திருக்கோயிலூருக்கருகில் பெண்ணையாற்றில் வடகரையில் நெற்குணம் என்ற ஊர் உள்ளது. இங்கு இரண்டாம் இராசாதிராசன் (1163-1178) காலத்தில் கட்டப்பெற்ற சிவாலயம் உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் ''நெற்குன்றமான மதிவல்லப சதுர்வேதிமங்கலம்'' என்றும் கோயில் ''திருப்பனிச்சந்துறை உடைய நாயனார்'' என்றும் குறிப்பிடப்பெறுகிறது. இதிலிருந்து இது சோழராட்சியின் இறுதிக்காலத்தில் சிறப்பு பெற்ற ஊர் என அறிகிறோம். ஊர் பெயர் நெற்குன்றம் எனப் பட்டபோதிலும் கோயிலுக்கு இப்பெயர் இல்லை.

வடஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் நெற்குணம், நெடுங்குணம் என்ற ஊர்கள் உள்ளன. நெற்குன்றம் என்ற ஊர் இல்லை. கல்வெட்டுகளிலும் நெடுங்குணம், 'நெடுங்குன்றம்' என குறிப்பிடப்படுகிறது. இவ்வூரில் சிவாலயம் ஏதும் கல்வெட்டுகளுடன் இல்லை. நெற்குணம் ஊரை கி பி 895 இலும், 1430 இலும் எழுதப் பெற்ற கல்வெட்டுகள் ''சிங்கபுர நாட்டு நெற்குணம்'' என்றே கூறுகின்றன. இவ்வூரிலும் சிவாலயம் ஏதும் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படவில்லை

செங்கற்பட்டு மாவட்டத்திலும் நெடுங்குன்றம் என்ற ஊர் உள்ளது. நெற்குன்றம் என்ற ஊர் இல்லை. கல்வெட்டுகளில் இவ்வூர் ''புலியூர்கோட்டத்து நெடுங்குன்ற நாட்டு நெடுங்குன்றம்'' என குறிப்பிடப்பெறுகிறது.

பொதுவாக தேவாரப்பாடல் குறிப்பிடும் தலப்பெயர்கள் மாற்றம் ஏதுமின்றி கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெறுகின்றன. மேலும் அப்பெயர்கள் ஊருக்கும் கோயில் இறைவனுக்கும் சேர்த்து ஒரே பெயராகவே விளங்கியுள்ளன எனவும் அறிகிறோம். எடுத்துக்காட்டாக மழபாடி, திருமழபாடி, திருமழபாடி உடைய நாயனார்- நெல்வாயில் அரத்துறை- ''ஸ்ரீமுடிகொண்ட சோழ சதுர்வேதிமங்கலத்து உட்படு பிரம்மதேயமாய்க் கூடின திருவரத்துறை நெல்வாயில் திருவரத்துறை உடையார்கோயில்'' என இப்படி இன்னும் பல ஊர் கோயில் பெயர்களைக் கூறலாம்.

இம்முறையில் சம்பந்தர் பாடல் கூறும் பெயர் கல்வெட்டுகளிலும் பயின்று வருவது திருநெற்குன்றத்து திருநெற்குன்றமுடையார் கோயிலுக்கு மட்டுமே ஆகும். எனவே மேலே உள்ள ஏனைய ஊர்களை அவர் பாடியிருக்க முடியாது எனஉறுதியாகக் கூறலாம். மேலும் திண்ணக்குளம் ஊர் பல்லவமன்னன் தந்திவர்மன் காலத்தில் தந்திவர்ம மங்கலத்தின் ஒரு பகுதியாகவும், பிறகு இப்பெயரே மதுராந்தக சதுர்வேதிமங்கலம் எனவும் பெயர்மாற்றமடைந்துள்ளது. இவ்வூரில் கிடைக்கும் பல்லவர் காலத்தூணும் இவ்வூரின் பழமையை நாம் அறிய உதவுகிறது.

இதிலிருந்து சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இன்றைய திண்ணக்குளம் (திருநெற்குன்றம்) என்பதில் ஐயத்திற்கு இடமுண்டோ?

## எல்லாம் இறைவன் செயல்

**நம்பிக்கை மட்டும் இருந்தால் தளராத உறுதியைத் தருகிறேன் நானே.**

—பகவத் கீதை

### கல்வெட்டு தரும் செய்திகள் :

#### நாட்டுப் பிரிவுகள்

கல்வெட்டுகள் அக்காலத்தில் இவ்வூரமைந்து விளங்கிய வளநாடு, நாடு ஆகியவற்றின் பெயர் விவரங்களைத்தருகின்றன. இதன்படி இவ்வூர் முதலாம் இராசேந்திரன் காலத்தில் ''வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுப்பிரிவின் கீழ் மதுராந்தக சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்த ஊராக திருநெற்குன்றம்'' என்ற பெயரில் விளங்கியதாக அறிகிறோம்.

வளநாட்டுப்பிரிவின் பெயர் தியாகவல்லி வளநாடு என முதலாம் குலோத்துங்கன் காலத்திலும், திரிபுவனமுழுதுடை வளநாடு என விக்கிரமசோழன் காலத்திலும், இராஜராஜவளநாடு என இரண்டாம் இராஜாதிராஜன் காலத்திலும் மாற்றமடைந்துள்ளன. நாட்டுப்பிரிவின் பெயர்மட்டும் மாறவில்லை.

#### அம்மன் சன்னதி

நெற்குன்றநாதர் சன்னதியையொட்டி தெற்குநோக்கி அமைந்துள்ள ஸ்ரீகுந்தளாம்பிகை அம்மன் சன்னதியின் வெளிப்புறச் சுவர்களில் விக்கிரமசோழன் கல்வெட்டுகள் நான்கும் இரண்டாம் இராசாதிராசன் காலத்து கல்வெட்டுகளும் இருக்கின்றன. எனவே இந்த அம்மன் சன்னதி விக்கிரமசோழன் காலத்தில் கட்டப்பெற்றிருக்கக்கூடும்.

#### திருப்பாதாளீசுவரம்

சண்டிகேசுவரர் சன்னதியில் வடபுறம் விசுவநாதர் சன்னதி அமைந்துள்ளது. இதன் சுவரில் இரண்டாம் இராஜாதிராஜன் 10-வது 13-வது ஆண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் இக்கோயில் பெயர் திருப்பாதாளீசுவரமுடைய மகாதேவர் என குறிப்பிடப் படுகிறது. இக்கோயில் கி.பி.1173 இல் அம்மன்னர் காலத்தில் கட்டபெற்றதெனலாம்.

#### நகரம் வீரராஜேந்திரபுரம்

திருநெற்குன்றத்தின் ஒரு பகுதி வீரராஜேந்திரன் காலம் முதல் வணிகர்கள் வாழு

கின்ற நகரமாக வீரராஜேந்திரபுரம் என்ற பெயரில் விளங்கியது. இதனை முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், மூன்றாம் இராசேந்திரன் ஆகியோரது கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

#### மடம்

இக்கோயிலையொட்டி அறம் வளர்க்கும் சாலையாகவும், கல்வி வழங்கும் கூடமாகவும் திகழ்ந்த மடம் ஒன்று இருந்துள்ளது. நாற்பத் தெண்ணாயிரவன் திருமடம் என்றும் குலோத் துங்கசோழன் திருமடம் எனவும் அழைக்கப் பட்ட இம்மடத்தை விற்காவூரைச் சேர்ந்த வேளான் நாயகன் என்பவர் கட்டியுள்ளார். திண்ணகுளத்தின் கீழ்ப்பகுதியான விரகாலூரே கல்வெட்டில் விற்காவூர் எனப்படுகிறது.

#### ஆறு-குளங்கள்

இவ்வூரின் தெற்கில் ஓடுகின்ற கொள்ளிட ஆறு கல்வெட்டுகளில் உத்தம சோழப்பேராறு என்றும் ராஜகம்பீரப்பேராறு எனவும் குறிப் பிடப்படுகிறது. இவ்வூரின் தெற்கில் திருவேங் கடச்சோமாசியார் குளமும் இதன்கரையில் பிள்ளையார் கோயிலும் இருந்துள்ளது.

#### மண்டபம்

இவ்வூரில் மதுராந்தகன் மண்டபம் என்ற பெயரில் விளங்கிய மண்டபத்தில் ஊர்சபை கூடி தீர்மானங்கள் இயற்றியுள்ளன. மேலே சொன்ன குளத்துப்பிள்ளையார் சன்னதியின் முன்பும் கூட்டம் கூடி ஊர் நிர்வாகம் பற்றி விவாதித்துள்ளது.

#### அளவை

விசய நகரமன்னர் காலந்தொட்டு இரா சவிபாடன் என்ற நீட்டலளவைக் கோல் இவ் வூரில் புழக்கத்திலிருந்தது என அறிகிறோம்.

#### விளக்குகள்-விழாக்கள்

முதலாம் இராசேந்திரனின்14வதுஆட்சி ஆண் டில் சேலூர் மங்கலமுடையான் விரையாநிலை அரங்கன் என்பவர் ஒரு நந்தாவிளக்கு ஒன்று எரிய வைக்க 30 காசு கொடையாக கொடுத் துள்ளார். முதலாம் குலோத்துங்கனின் 49வது ஆண்டில் வீரராஜேந்திரபுரத்து நகரத்தார்கள் இக்கோயில் இறைவனுக்கு காவேரி திருமஞ்ச னம் கொண்டுவந்து பூசை நடத்த அரையே ஒருமாவரை நிலத்தை கொடையாக கொடுத் தனர். இதே ஆண்டில் வைகாசி, தைப்பூசத் திருவிழா நாட்களில் சேவிக்க வந்த அடியார் களுக்கு நாற்பத்தெண்ணாயிரவன் திருமடத் தில் சோறுபோட மடப் புறமாக இந்நகரத்தார் நிலம் வழங்கி உள்ளனர். தைப்பூசத் திருவிழா நடத்த செய்யப்பட்ட ஏற்பாட்டை விக்கிரம சோழன் கல்வெட்டும் கூறுகிறது. இம்மன்னர் காலத்தில் கோயிலுக்கு நிலதானமும் விளக்கு எரிக்க கொடைகளும் வழங்கப்பட்டுள்ளது. இராஜாதிராஜன் காலத்துக் கல்வெட்டுகள் திரு நெற்குன்றநாதர், திருப்பாதாளீசுவரர் கோயில்களில் விளக்கெரிக்க வழங்கிய கொடை பற்றி கூறுகின்றன.

---

## திருஞானசம்பந்தர் திருப்பெயர்களுள் சில:

**பிறந்த ஊருடன் சேர்த்து**

1. காழிமன்னன்
2. புகலியர் கோன்
3. வெங்குரு வேந்தன்
4. தோணிபுரத்தோன்றல்

**ஞானப் பாலுண்டமை குறித்து**

1. திருஞானசம்பந்தர்
2. ஞானபோனகர்
3. பாலறாவாயர்

**திருஞானசம்பந்தரை முருகராகப் போற்றி.**

1. ஆளுடைய பிள்ளையார்
2. புரமெரித்தார் திருமகனார்
3. தெய்வ ஞானக்கன்று

---

திருநெற்குன்றத்து ஊரின் தென் பிடா கையாக (சிற்றூர்) நென்மலியான அழகிய சேமநல்லூர் கட்டளை என்ற ஊர் விளங்கியது. இவ்வூர் ராஜகம்பீரப் பேராற்றின் (கொள்ளி டம்) தென்கரையிலிருந்தது என இரண்டாம் இராசாதிராசனின் 10-வது ஆண்டு கல்வெட்டு கூறுகிறது.

இவ்வூரில் இக்கோயிலுக்கு நிலம் மதுராந் தக சதுர்வேதிமங்கலத்து சபை உறுப்பினர் வல் லூர் நாராயணபட்டன் என்பவரால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வூரே தில்லைநாயக நல்லூர் எனவும் விக்கிரமசோழன் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணதேவராயரின் சிற்றரசர் பெத்தப்ப நாயக்கர் என்பவர் இவ் வூரில் இரண்டரை வேலி நிலம் இக்கோயிலின் பூசை வழிபாட்டுக்கெனக் கொடுத்துள்ளார்.

#### திருப்பணி

தேவாரகாலந் தொட்டு மன்னர்களாலும் பக்தி நிறைந்த மக்களின் அன்பான அரவணைப் பினாலும் சிறந்து விளங்கிய இப்பழமையான வரலாற்றுக்கோயில் இன்று அறநிலையத்துறை யின் நிருவாகத்தில் திருமழபாடி வகையறாக் கோயில்களில் ஒன்றாக இருந்து வருகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு சீனிவாச அய்யர் என்பவரின் முயற்சியால் இக் கோயில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. சம்பந்தர் பாடல் பெற்ற தலமான இதனை மேலும் போற்றி வளர்த்திட வேண்டும். இக்கோயிலாய்வில் எனக்கு உறுது ணையாக நின்ற விரகாலூர் டாக்டர் வி. நாக ராஜ் மற்றும் எனது மாணவர் உ.நேசன் ஆகி யோரின் பணி பாராட்டுக்குரியதாகும்.



# வள்ளலார் கண்ட நாவுக்கரசர்

கவிஞர் எஸ். ஜோதி, பி.ஏ.,

சமண மதம் ஆட்சி செலுத்திய காலம்; சரித்திர ஆராய்வாளர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்று சான்று தரும் காலம்; மகேந்திர வர்மன் மனமாற்றத்தால் மக்கள் கூட்டம் சமணத்தை தழுவத் தயாரான காலம். அந்தக் காலத்தில் தோன்றியவர்கள் அப்பரடிகள் என்னும் நாவுக்கரசர் ஆவர்.

பரதேசிகள் ஆண்ட காலம்; பத்தொன்பதாம் நூற்றாண்டு என்று படித்தறிந்தோர் சொல்லும் காலம்; சாதிகளின் பேரால் உட்பூசல்கள் சதிராடிய காலம்; அந்தக் காலத்தில் தோன்றியவர்கள் அருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் ஆவர்.

''அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்'' என்ற திருமூலர் திருவாக்கிற்கிணங்க தம் வாழ்நாளுக்கு ஆயிரமாண்டுகட்கும் முன்னர் அப்பரடிகள் பெற்ற அநுபவங்களைத் தம் அகநோக்கால் கண்டார்கள் வள்ளலார்.

வள்ளலார் கண்ட நாவுக்கரசர் ஒருவரே என்றாலும் அவர்கள் தாம் பெற்ற அநுபவ முதிர்ச்சியால் இரண்டுவித தோற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முதல் தோற்றம் கரையேறிய நாவுக்கரசர். அடுத்த தோற்றம் கரையேற்றும் நாவுக்கரசர்.

**கரையேறிய நாவுக்கரசர்**

சமணத்தைத் தழுவிய நாவுக்கரசர் சங்கடங்கள் பல பெற்றார்கள். திலகவதி அம்மையார் என்னும் அருங்குணத் தமக்கையரால்-அதிகை வீரட்டானத்து ஆண்டவனருளால் தொல்லைகள் நீங்கப்பெற்றார்கள்; துயர் தந்த சமணத்தைக் கைகழுவி சைவத்தில் தலைப்பட்டார்கள். மனமாற்றம் பெற்ற மருணீக்கியார் என்னும் நாவுக்கரசருக்கு மலைமலையாக எதிர்ப்புகளும், இடையூறுகளும் விளைந்தன. அனல்வாதம், புனல்வாதம் எனப் பல வாதம் பேசும் அமணர் கல்லிற்கட்டி நாவுக்கரசரை கடலில் வீழ்த்த எண்ணினர். எண்ணம் செயல் வடிவம் பெற்றது. ஆனால் விளைவு ஏமாற்றத்தைத் தந்தது.

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கை தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே''

என்று திருவாய் மலர்ந்தருளினார்கள் நாவுக்கரசர். கல்மிதந்தது. நாவுக்கரசர் கரையேறினார்கள். உலகைச் சுற்றி வளைத்திருக்கும் உப்புக் கடலை மட்டும் அல்ல, வள்ளுவப் பெருந்தகை சொன்ன ''பிறவிப் பெருங்கடலை''யே கடந்து விட்டார்கள்.

வள்ளலார் இறைவனிடம்,

''சீர்தரு நாவுக்கரையரைப் போலிச் சிறியேனு மோர்
தீர்தரு மாயை சமணான் மனக் கருங்கல்லிற் கட்டி
பார்தரு பவக் கடலிடை வீழ்த்திடப் பட்டு ழன்றே
ஏர்தரு ஐந்தெழுத்தை ஓதுகின்றேன் கரை யேற்றரசே''.

என வேண்டுகிறார்கள். நாவுக்கரசர்க்கு உற்றதை தாமும் உற்றதாகக் கருதி முறையிடுகிறார்கள். "நான் மாயையால் மனம் என்னும் கருங்கல்லிற் கட்டி, பாவம் எனும் கடலில் வீழ்த்தப்பட்டுழல்கின்றேன்; ஐந்தெழுத்தை ஓதுகிறேன். ஆண்டவரே என்னையும் கரையேற்றுக'' எனக்கனிந்துபாடி வேண்டினார்கள்.

இந்தத் தோற்றத்தையே இங்கிதமாலை என்னும் பகுதியில் எழிலாகச் சித்தரித்துக் காட்டினார்கள். தலைவனின் மாண்புபற்றித் தலைவி தன் தோழியிடம் கூறி விளக்கம் கேட்பதாக உள்ள பகுதி மிக்க பொருட்செறிவும் மேலான நடையழகும் கொண்ட பகுதி. அதில் இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் பாவித்து பாடினார்கள்.

''தளி நான் மறையீர் ஒற்றி நகர் வாழ்வீர் தனி ஞான
ஒளி நாவுக்கரசை ஐந்தெழுத்தாலும் வாரி கடத் தினீரென்றேன்
களி நாவலனை ஈறெழுத்தால் கடலில் வீழ்த்தி னேமென்றே!

எளியேற் குவப்பின் மொழிகின்றார். இதுதான் சேடி என்னேடி''. என்ற அருட்பாவில் நாவுக்கரசரை 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தால் கடலிலிருந்து கடத்தினீர் என்றேன்; அதற்கு அவர் நாவலூர் நம்பி என்னும் சுந்தரரை (தூது' என்னும்) இரண்டெழுத்தால் வாழ்க்கை கடலில் வீழ்த்தினேன் என்கின்றார். இதுதான் என்னேடி தோழி'' என மொழிந்து கடலிலிருந்து மீட்கப்பட்ட நாவுக்கரசரையும் கடலில் வீழ்த்தப்பட்ட சுந்தரரையும் அழகாகக் காட்டினார்கள்.

**கரையேற்றும் நாவுக்கரசர்**

தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்து மேல்நிலைச் செல்லல் போல ஒவ்வொரு அனுபவங்களாக நாவுக்கரசரை உயர்த்தியது.

திருவையாற்றில் ''கண்டேன் அவர் திருப்பாதம்'' எனத் தொடங்கி தான்கண்ட காட்சியினைச் சொன்னார்கள். ''காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்'' என்று சிவசக்தி தரிசனத்தைச் சொல்லி திருமறைக் காட்டில் திறக்கப்பட வேண்டிய கதவினைத் திறந்து, நல்லூரில் திருவடிக்காட்சி பேறுபெற்று உயர்ந்தார்கள். திருவடிக் காட்சி என்பது இறைநிலையை ஆசிரியர் உணர்த்துவது என்ப. ஆனால் நாவுக்கரசர்க்குச் சிவபிரானே வந்து காட்சி தந்தார். மாணவர் பள்ளியில் இறுதியாண்டு பயின்று வெளியிற் செல்லும்போது தேர்ச்சி சான்றிதழ் பெற்றுச் செல்லல் போலக் கரையேற்றும் நாவுக்கரசர்க்குத் திருவடிக் காட்சி உறுதுணையாய் அமைந்தது. திருவடிக் காட்சி தரும் இன்பத்தை ஏட்டில் எழுத இயலாது என்ப. அந்நிலை கொண்ட நாவுக்கரசரைக் கண்டு தான் பெற்ற உவகையினையும் தரணியே கண்டுகொள்ளச் செய்தார்கள் வள்ளலார்.

''துடிவைத்த செங்கை அரசே நல்லூரின் தூமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்கள் அப்பர்தஞ் சென்னியது குளிர்ந்ததெப்
படிவைத்தோ இன்பம் யான் எனுந்தொறுமிப் பாவிக்குமால்
குடிவைத்த புன்தலையொன்றோ மனமுங் குளிர்கின்றதே''

என்று பாடினார்கள். நாவுக்கரசர்க்கு காட்டிய திருவடிக்காட்சி வள்ளலார்க்கு நினைக்குந்தோறும் தலையும் மனமும் குளிர்ந்தது என்று கூறி மகிழ்ந்தார்கள்.

திருநாவுக்கரசு என்ற பெயர் தவிர வேறொன்றுமறியாத அப்பூதி அடிகளை நாவுக்கரசர் வாழ்த்தினார்கள்; அப்பூதி அடிகள் தம் மைந்தனை இறப்பினின்று நீக்கி உயிர்த்தெழச் செய்தார்கள்; அப்பூதி அடிகட்கும் அருள் பாலித்தார்கள். அதனை நாவுக்கரசர் தன்னுடைய இசை பரிமளிக்கும் பாடலில்,

''வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம்பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதி
குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே'

என்று சுட்டிக் காட்டினார்கள். பழனத்துறை நின்ற இறைவன் கலிமெலிய அஞ்சி அப்பூதி அடிகளின் தலையில் சேவடியை வைத்தான் எனறு நாவுக்கரசரே நவில்கிறார்கள். நாயக நாயகி பாவத்தில் அமைந்த இப்பாடற்பகுதி அருஞ்சுவையுடையது.

நாவுக்கரசர் ஐந்தெழுத்தை ஓதிக்கரையேறி, உழவாரப்படை தாங்கிச் சைவத்தை சிறக்கச்செய்து, அப்பூதிக்கு அருள்தந்து சிவமானார்கள். தொடக்ககாலத்தில் கரையேறிய நாவுக்கரசாய்த் காட்சிதந்தவர்கள் கரையேற்றும் நாவுக்கரசரனார்கள். அந்த நாவுக்கரசரை வாலறிவனாக - வையக நாயகனாக-சைவத் தலைமைப்பதியாக-குலதெய்வமாக- குருவாகப் போற்றி கண்டார்கள் வள்ளலார். 'ஆளுடை அரசுகள்-மாலை' என்ற பகுதியில்,

''கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்
கனியே நாவரசே செங்கரும்பே வேதப்
பண்ணுளே விளைந்த அருட்பயனே உண்மைப்
பதியோங்கு நிதியேநின் பாதமன்றி
விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்
விரும்பேன் என்றனையாளவேண்டுங் கண்டாய்
'ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய்' என்ற
உத்தமனே சித்த மகிழ்ந்துதவு வோனே.''

என்றும்,

''தேர்ந்ததவுளத்திடை மிகவும் தித்தித்தூறுஞ்
செழுந்தேனே சொல்லரசாந்தேவே மெய்மை
சார்ந்து திகழ் அப்பூதியடிகட்கு இன்பந்
தந்த பெருந்தகையே என் தந்தையே யுட்
கூர்த்தமதி நிறைவே என் குருவே எங்கள்
குல தெய்வமே சைவக் கொழுந்தே துன்பந்
தீர்ந்த பெரு நெறித் துணையே ஒப்பிலாத
செல்வமே அப்பனெனத் திகழ்கின்றோனே''

என்றும்பாடி தமக்கு அருள்தர வேண்டினார்கள்; அருள் பெற்றார்கள். அதனை வள்ளலார் வாக்குமூலம் போல,

''கடல் கடந்தேன் கரையடைந்தேன் கண்டு கொண்டேன் கோயில்
கதவுந் திறந்திடப் பெற்றேன் காட்சியெலாங் கண்டேன்
அடர்கடந்த திருவமுது உண்டு அருள் ஒளியால் அனைத்தும்
அறிந்து தெளிந்து அறிவுருவாய் அழியாமை அடைந்தேன்
உடல்குளிர்ந்தேன் உயிர்கிளர்ந்தேன் உள்ளமெலாம் தழைந்தேன்
உள்ளபடி உள்ள பொரு ளுள்ளவனாய் நிறைந்தேன்
இடர் தவிர்க்கும் சித்தியெலாம் என்வசம் ஓங்கினவே
இத்தனையும் பொது நடஞ்செய் இறைவனருட் செயலே''

எனமொழிந்து மகிழ்ந்தார்கள். நாமும் நாவுக்கரசரை வழிபடுவோம். கரையேறுவோம். அதற்கு நாவுக்கரசரும் நங்கள் வள்ளலாரும் நவின்ற ஐந்தெழுத்தை ஓதுவோம். இறையருள் எங்கும் நிறைந்து இனிமையை வாரிவழங்கப் பெறுவோம்.

அருட்பெருஞ்சோதி. தனிப்பெருங்கருணை.
அருட்பெருஞ்சோதி. அருட்பெருஞ்சோதி.




டாக்டர் இரா. நாகசாமி

(திருஞானசம்பந்தர்தம் 'தேவாரப்' பாடல்களை அப்படியே எடுத்தாண்டும், பிறபாடல்களைத் தாமியற்றியும் மிகச்சிறப்பாக இந் நாட்டிய நாடகத்தை உருவாக்கம் செய்துள்ளார் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள். அற நிலையத்துறை சிறப்புற நிகழ்த்திய தெய்வச் சேக்கிழார் விழாவில் இந்நாடகத்தைப் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் கண்களிப்ப கண்டு மகிழ்ந்தார்கள். ''திருக்கோயில்'' இதழ் அன்பர்களுக்காக இந்நாட்டிய நாடகம் அன்புடன் வழங்கப்படுகிறது.)

கட்டியக்காரன் அரங்கில் தோன்றி ஞானக் குழந்தையின் பெருங்காதை ஆட, திருயானைக் குழந்தையாகிய கணபதியின் அருளை வேண்டுகிறான்.

ஆரபி

சிவஞானங் குழைத்துச்
சிவை முலைப்பாலூட்டத்
தவஞானந் திகழ்
தமிழிசை மலர்ந்திட
வருஞானக் குழந்தை
பெருங்காதை பாட
திருயானைக் குழந்தை
திருவடி காப்புத்தானே.

**ஞானக்குழந்தை**

காட்சி-1.

சீர்காழிப் பதியில் சிவபாத இருதயருக்கும் பகவதியாருக்கும் ''ஞானக்குழந்தை பிறந்திருக்கிறது'' எனப் பெண்கள் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். வீடுகளில் விளக்கேற்றி வைக்கின்றனர். ஆலத்திதட்டேந்திப் பூர்ண கும்பங்களை வைக்கின்றனர். சிவபாத இருதயரும் பகவதியும் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுகின்றனர். 'திருமறையின் நெறிவாழத் தமிழிசையின் புகழ் வாழத் தோணி புரத்து உதித்த செல்வனே! அன்று அறம் உரைத்த அண்ணலின் குமரனாய்ப் பிறந்து தமிழுரைத்தாய்; இன்று கௌணியர் குலத்துதித்துத் தமிழிசைத்தாய் தாலேலோ'' எனத் திரு அவதாரம் பாடித் தாலாட்டுகின்றனர்.

**ஞானக்குழந்தை தாலாட்டு**

இராகமாலிகை-ஆதி

நீலாம்பரி

திருமறையின் நெறிவாழத் தமிழிசையின் புகழ் வாழ
அருமறையோர் அகம் மகிழ அன்புவழி மனஞ் சேரத்
திருத்தோணி புரத்துதித்த திருவே சிவமணியே
சிவம்பெருக வந்தகண்ணே தாலோ தாலேலோ

2. ஆனந்தபைரவி

அன்றுபுகழ் அந்தணர்க்கு அறம் உரைத்த அரனருளால்
குன்றெறிந்து தமிழுரைத்த குமரனாய் வந்துதித்தாய்
இன்று எங்கள் மனம்குளிர இசைத்தமிழ் எடுத்தியம்ப
அன்னைஉமை அருள்சுரக்க அவதரித்தாய் தாலேலோ. 2.

நாட்டைக் குறிஞ்சி

மௌலிதனில் மதிபுனைந்தார் தாளினை மனத்துவைத்துக்
கௌணியர்தம் குலத்தினிலே வந்துதித்த கண்மணியே
சண்பைநகர் நலஞ்சிறக்கச் சீரொடும் வந்த செல்வ
எந்தனுடை இன்னுயிரே ஏழிசையே கண்வளராய். 3.

காட்சி-2.

சிவபாத இருதயர் ஒரு நாள் காலையில் நீராடக் கிளம்புகிறார். குழந்தையும் உடன் வருகிறான். குழந்தையைக் குளக்கரையில் அமர்த்தி நீரில் அகமர்ஷண ஸ்தானம் செய்கிறார். நீரில் அமிழ்ந்து மூழ்கியதும் தந்தையைக் காணாது குழந்தை அழுகிறான். திருத்தோணியப்பரின் ஆலயச் சிகரத்தை நோக்கித் தனது பிஞ்சுகரத்தை நீட்டி அம்மா அப்பா என்று அழுகிறான். சிவபெருமானும் உமையன்னையும்

தோன்றுகின்றனர். உமையன்னை குழந்தையைத் தன் மடியில் எடுத்து வைத்துக்கொண்டு உச்சி மோந்து தனது திருமுலைப்பாலைத் தங்கக் கிண்ணத்தில் ஏந்திக் கொடுக்கிறாள். உமை தந்த பாலைக் குடித்து ஞானக்குழந்தையாகிறான்.

குழந்தை திருமுலைப்பால் குடித்தல்

ஜோன்புரி

(சிவபாத இருதயர், குழந்தையை அழைத்துக் கொண்டு குளக்கரைக்கு வருதல்).

சிவசிவசிவசிவ சங்கர சம்போ
பவபவபவபவ மானஸ ஹம்ஸ
ஹரஹரஹரஹர ஹரவென உன்னை
அனுதினம் அடிதொழ அருள்புரி அரனே.

சாரங்கா-ஆதி

பல்லவி

நீராடினார் சிவபாத இருதயர்
செழுநீர்த் திரளருளில் ஜெகமே திளைத்
தெழவே (நீராடினார்).

சரணம்

பிள்ளைதனை கரையில் அமர்த்தி அகல அஞ்சிப்
பிஞ்ஞகன்தாளை எண்ணிப்புனிதக்குளத்திறங்கி
-நீராடினார்.

நாளும் நியமமுடன் நாத னடிபரவும்
வேளை இதுவெனவே நீரில் அமிழ்ந்து மூழ்கி
-நீராடினார்.

தந்தையைக் காணாது குழந்தை அழுதல்

நீரிகௌளை-சாபு

பல்லவி

அழுதனன் குழந்தை அதனைக் காணாது
அங்குமிங்கும் பார்த்து
-அழுதனன்

கண்களில் நீர்ததும்பக் கரதலங்கள் பிசைந்து
விண்ணகம் தனைநோக்கி விம்மிவிம்மி வாய்
திறந்து—அழுதனன்
நெஞ்சு நெகிழும் வண்ணம் நெடிய சிகரம்
நோக்கிப்
பிஞ்சுக் கரத்தை நீட்டி அம்மே அப்பா என்று
—அழுதனன்
(அம்மையப்பர் எழுந்தருளித் திருமுலைப்பால்
கொடுத்தல்)

கல்யாணி-ஆதி
பல்லவி

அன்னை எழுந்தருளினாள் ஆங்கே
அண்ணலுடன் அவரின் அடலேறின் மீதமர்ந்து
-அன்னை

சரணம்

அனைத்து உலகினுக்கும் அன்பு பொழியும்
அன்னை
அழுதிடும் குழந்தையை அணைத்து மடியில்
கொஞ்ச—அன்னை
அங்கையிற் குழந்தையை அள்ளியே உச்சி
மோந்து
தங்கக் கிண்ணந்தனில் தன்னுடைய பாலை
ஊட்ட—அன்னை

(குழந்தை ஞானப்பால் உண்டல்)

மாண்டு-ஆதி

ஞானப்பால் உண்டது பிள்ளை ஞானப்பால்
உண்டது
நானிலம் எங்கிலும் ஆனந்தம் பொங்கிட
-ஞானப்பால்.

சரணம்

தேவாதி தேவனின்தேவி உகந்தளித்த
தேனான சிவஞானம் திருவாய் வழிந்தோட-
-ஞானப்பால்

காட்சி-3.

**பாலறாவாயன் வந்தான்**

நீராடி நியமம் முடித்துக் கரை ஏறின சிவபாத இருதயர், குழந்தையின் கையில் கிண்ணத்தையும் வாயில் பால் வழிவதையும் கண்டு துணுக்குறுகிறார். யார் தந்த பாலை உண்டாய் என்று அருகிலிருந்த கோலை எடுத்து அதட்டுகிறார். குழந்தை ஆலயத்தைக் காட்டி 'தோடுடைய செவியன்' என்னும் பதிகம் திருவாய் மலர்ந்தருள மூன்று வயதுக் குழந்தை பாடுவதைக் கேட்டுக் சிவபெருமானின் அருளை வியந்து ஆனந்தக் கூத்தாடுகிறார் சிவபாத இருதயர். ஊர்மக்கள் இவ்வதிசயம் கேட்டு ஓடிவந்து 'பாலறாவாயன் வந்தான் ஞானசம்பந்தன் வந்தான்'' எனப் பாடித் திருவீதி உலாவாக அழைத்து வருகின்றனர்.

(கரை ஏறிய தந்தை குழந்தையின் வாயிலிருந்து பால் வழிவதைக் கண்டு யார் தந்த பாலை உண்டாய்'' என்று அதட்டல்)

விருத்தம்-மோகனம்

பாலமுது உண்ட பாலகனைக் கண்டு பதறி
எழுந்தார் தந்தை
நாளும்தான் பேணி வந்த நேமம் நெகிழ்ந்த
தெனக் கோபம் மிகவே சீறி
யாரே அளித்தார் இந்தப் பாலை நீ சொல்வாய்
என்று
பாரோர் நடுங்கும் வண்ணம் கோலால் பய
முறுத்த

(தோணிபுரத்துச் சிகரம் காட்டி அம்மையப்பரைக் காட்டி தோடுடைய செவியன்' பதிகம் பாடல்)



பண்; நட்டப்பாடை

நாட்டை ரூபகம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவ னன்றே

(சிவபாத இருதயரும் ஊராரும் ஆனந்தக் கூத் திடுதல்)

மல்லாரி-ஆதி
உமைதந்த பாலன் வந்தான்
எமையாளும் பிள்ளை வந்தான்
தமிழ்பாடும் குமரன் வந்தான்
அமிழ்துண்ட அண்ணல் வந்தான்
பாலறாவாயன் வந்தான்
ஞானசம்பந்தன் வந்தான்
சீர்காழிச் செல்வன் வந்தான்
ஜெகத்தீரே வருவீரே

காட்சி-4.

**திருத்தாளம் பெற்றது**

திருஞானசம்பந்தர் வளர்ந்து வருகிறார். திருக்கோலக்கா என்னும் பதிக்கு எழுந்தருளி ''மடையில்வாளைபாய'' என்னும் பதிகம் பாடத் தொடங்குகிறார். சிறுவர் தன் கையினால் தாளம் போட்டுக் கொண்டு பாடுவதைக் கண்டு சிவபெருமானும் தேவியும் எழுந்தருளி ''நமசிவாய'' என்னும் பெயர் பொறித்த தங்கத்தினால் ஆன தாளம் அளிக்கின்றனர். அன்றிலிருந்து ஞானசம்பந்தர், தாளம் ஏந்திப் பதிகள் தோன்றும் பரமனைத் தமிழிசையால் பாடுகிறார்.

பண்: தக்கேசி
காம்போதி-ரூபகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்கா வுளான்
தடையும் பிறையும் சாம்பற் பூச்சும்கீள்

உடையும் கொண்ட உருவம் என்கொலோ?
பெண்தான் பாகமாகப் பிறைச் சென்னி
கொண்டான், கோலக்காவு கோயிலாக்
கண்டான், பாதம்கையால் கூப்பவே
உண்டான் நஞ்சை, உலகம் உய்யவே.

காட்சி-5

**திருநீலகண்ட யாழ்ப்பாணர் வருகை**

திருஞானசம்பந்தர், சிவபெருமான் மீது திருப்பதிகங்கள் பாடுகிறார் எனக் கேள்விப் பட்டு யாழ் வாசிப்பதில் சிறந்த பாணர் குலத்



**தெய்வச் சேக்கிழார் விழாவில் ''ஞானக் குழந்தை'' நாட்டிய நாடகம் நடைபெற்றது. நாடகத்தை உருவாக்கிய டாக்டர் இரா. நாகசாமி அவர்களைத் துணை ஆணையாளர் திரு தி. ஜெயராமன் பி.ஏ.பி.எல்., அவர்கள் பாராட்டுகிறார்.**

---

துதித்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவி மதங்கசூளாமணியாரும் சீர்காழிக்கு வருகின்றனர். சம்பந்தர் அவர்களை அன்போடு வரவேற்கிறார். பாணர் யாழ் வாசிக்கக் கேட்டு அகம் மகிழ்கிறார். ''நான் என்றும் தங்கள் உடனே இருந்து தங்கள் பாடல்களை யாழில் வாசிக்க அருள வேண்டும்'' எனத் திருநீலகண்டர் சம்பந்தரை வேண்டிக் கொள்ளவே சம்பந்தரும் அதற்கு உடன்படுகிறார். அன்று முதல் சம்பந்தருடன் சென்று யாழிசைத்து வருகிறார்.

யாழ்ப்பாணர் வருகை

கேதாரம்-ஆதி

பல்லவி

திருநீலகண்டத்துப் பெரும்பாணர் வந்தார்
அருமான யாழேந்தி மனையாளும் சூழ
—திருநீலகண்ட.

அனுபல்லவி

பிள்ளைப் பிறைசூடி புகழ்பாடும் ஞானப்
பிள்ளையின் மனைதேடி மகிழ்வோடு காண-
திருநீலகண்ட

சரணம்

அன்போடு ஆளுடைப் பிள்ளையும் அழைத்து
ஐயரே நும்வரவு சிவம்பெருக வென்ன
-திருநீலகண்ட

(என்றும் உம் பாடலுக்கு யாழிசைக்க அருள வேண்டும் எனப் பாணர் வேண்டல்)

சாவேரி-சாபு

பல்லவி

என்றென்றும் உந்தமது ஏந்தலே இன்கவிதை
எந்தனுடைய யாழில் இசைக்க அருளல் வேண்
டும்- என்றென்றும்

சரணம்

பந்தம் தனை அறுக்கும் பரமனின் பாதமலர்
வந்தனை செய்து உடன் வரவும் இசைய
வேண்டும்—என்றென்றும்.

காட்சி-6.

(சம்பந்தர்தில்லையில் திருக்கூத்து தரிசித்தல்)
பண் காந்தார பஞ்சமம்

ஆடினாய் நறுநெய்யோடு பால்தயிர் அந்தணர்
பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும் பல்சடை
பனிகால் கதிர்வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல்
வினையே.

—(தொடரும்)




**கம்பன் கவி நயமணி வே. தியாகராஜன் (10)**

சோமவார விரதம் நோற்ற உக்கிரபாண்டியனுக்கு இறைவனது அருளால் ஒரு ஆண் மகவு பிறந்தது. குழந்தைக்கு வீரபாண்டியன் எனப் பெயரிட்டனர். திடீரென்று மழையின்மையால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. சோதிடர்கள் ஒரு வருட காலத்திற்கு மழை பெய்யாது எனக் கோள்களின் நிலையை ஆராய்ந்து கூறினர். பாண்டியன் இறைவனது ஆலயத்தை அடைந்து வேண்டினான். இறைவன் பாண்டியனது கனவில் தோன்றி ''பாண்டிய! மழை இப்போது வராது. அதற்காக வருந்தாதே. மேருமலையில் நிறைய நிதியுள்ளது.

''அடற்கதிர் வேலோய்! மாரி அரிது.,
இப்போது அதனை வேண்டி
இடற்படல்! வரைக்கு வேந்தாய் இருக்கின்ற
எரிபொன் மேருத்
தடப்பெரு வரையின் மாடோர் தனிப்பெரு
முழையிலிட்டுக்
கிடப்பதோர் எல்லை யில்லாக் கேடிலா சேம
வைப்பு.''

அந்த மேரு மலையை அடைந்து, அதன் செருக்கு நீங்கச் செண்டாலடித்து, நிதியிருக்கும் பாறையைத் திறந்து வேண்டுபவற்றை யெடுத்துக் கொண்டு, உனது மீன் முத்திரை இட்டு முடி வருவாயாக!'' எனக் கூறினார்.

பாண்டியன் மதுரைவிட்டுப் புறப்பட்டு மேருமலையை அடைந்து ''மலைகளுக்குத் தலைவனே! என் தந்தையான சிவபெருமானின் கைவில்லே! சூரிய சந்திரரும் நட்சத்திரங்களும் தொட்டுலவும் தெய்வீகமலையே! தேவர்களின் இருப்பிடமே!'' என்றெல்லாம் அழைத்தனன்.

''அவ்வரை அரசை நோக்கி வரைகளுக்கரசே
எந்தை
கைவரி சிலையே! பாரின்களைகணே! அளவில்
வானம்
தைவரு சுடரும் கோளும் நாட்களும் தழுவிச்
சூழும்
தெய்வத வரையே! மேலைத் தேவராலயமே
யென்னா.''

எவ்வளவோ பணிவாக வேண்டியும் மேருவிற்கான தெய்வம் வரவில்லை. சிறிய பாண்டியன் தன் கையிலிருந்த செண்டு எனும் ஆயுதத்தால் மலையினைப் புடைத்தான். மலை நடுங்கித் துடித்தது. அம்மலைக்கான மேருதெய்வம் பாண்டியன் எதிரில் தோன்ற ''இவ்வாறு தாமதமாக வருவதன் காரணம் யாது?'' எனப் பாண்டியன் வினவியபோது, ''நான் மனித உருத்தாங்கி தினமும் சோமசுந்தரப் பெருமானை வழிபடும் வழக்கம் கொண்டேன். இன்று ஒரு பெண்ணின் மீதுள்ள ஆசையால் இறைவழிபாட்டை மறந்து இவ்வாறு பரிபவ பட்டேன்.

''இன்று கேட்டிலையோ ஐய! ஏந்திழை ஒருத்தி
காமம்
துன்று மாகடலில் மோகச் சுழித்தலைப்பட்டு
வெள்ளி
மன்று ளாடிய பொற்பாகம் வழிபடல் மறந்து
தாழ்ந்து
நின்றுளேன் இனைய தீங்கின் நிமித்தினால்
அடியும்பட்டேன்''

''பெருமானே! எனைஅழைத்தகாரணம்யாது.'' என மேருத்தெய்வம் கேட்க, பாண்டியன் பொருள் வேண்டி வந்ததாகக்கூற, பொருள்



இருக்குமிடத்தை மேருவரசன் காட்டபாண்டியன் வேண்டிய பொருள் எடுத்துக் கொண்டு மலையின் அந்த இடத்தை மூடி, தனது மீன் முத்திரையிட்டு, மதுரைக்கு திரும்பினான். மலையிலிருந்து கொண்டு வந்த பொருளைச் செலவிட்டு, பிதிர்க்கள், தெய்வம், விருந்தாளிகள் யாவரும் மனமகிழுமாறு செய்ய சில நாட்களில் மழை பெய்து, பஞ்சம் நீங்கி, நாடு செழுமையடைந்தது.

உக்கிரகுமாரனாக பாண்டிய தேசத்தை வாழ வைக்க முருகப் பெருமானே தோன்றினான் என்பது நாம் அறிந்ததே. அப்படிப்பட்ட தெய்வம் நுழைந்தபோது வராதிருந்தது மேருமலையின் குற்றமன்றோ? இதே மாதிரி, உலகத்தை வாழ்விக்க திருமால் இராமனாக அவதரித்து, வருணனை இலங்கைக்குச் செல்ல வழி தருமாறு வேண்ட, வருணன் வரவில்லை. மேருமலையைச் செண்டால் அடித்தபோது மேருவரசன் தோன்றியதுபோல, அக்னிக்கணை கொடுத்த போது வருணன் எதிரில் தோன்றினான். ஏன்? இராமனோ, உக்கிர குமாரனான முருகனோ வணங்கி அழைத்தபோது வருணனோ மேரு அரசனோ வந்திருந்தால் வருணனும் மேருவும் முருகனைக் காட்டிலும் பெரியவர்கள் என்றாகிவிடும். ஆதலால் வழிபட்டபோது வராது, அதிகாரமாக பய முறுத்திய பின் வந்தனர். வருணன் மேரு இவர்களின் மரியாதையுள்ள தன்மையைக் காட்டுகின்றன இவ்வரலாறுகள்.

இவ்வாறிருக்க பிரளயம் வந்தது. உலகம் மறைந்து, சிவபெருமானிடமே ஒடுங்கியது. சிவபெருமான் தன் திருவுள்ளத்தால் திருமாலைப் படைக்க திருமாலின் உந்தியிலிருந்து தோன்றிய பிரமன் உலகத்தைப் படைக்கலாயினன். அந்நிலையில் இறைவனது திருவாக்கிலிருந்து பிரணவம் தோன்றியது. அதில் வேதம் பிறந்தது. நைமிசாரண்யம் என்னும் இடத்திலுள்ள முனிவர்கள் பொருள் தெரியாது, தாங்கள் திகைத்திருப்பது பற்றி முறையிட்ட நேரத்தில் அரபத்தர் என்னும் சிவாச்சாரியர் அவ்விடம் தோன்றி ''வேதத்தை அருளிய இறைவனே! உங்களுக்கு அதன் பொருளை விளக்குவார். மதுரையம்பதியில் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியுள்ள இறைவனை அடையுங்கள்'' என்று கூறினார். மாமுனிவர்கள் அனைவரும் மதுரையை அடைந்து சொக்கநாயகனையும், மீனாட்சி அம்மையையும்வணங்கிய காலத்தில், இறைவன் பதினாறு வயது காளையாக அவர்கள் எதிரில் தோன்றினார். வலக்கையில் பவித்திரமும் இடக்கையில் சிவஞான போதபுத்தகமும் விளங்கின. நான்கு வேதங்களும் அப்பெருமானின் பாதுகைகளாக திருவடிகளை அலங்கரித்தன.

''ஏதமில் பவித்திரம் வலக்கரன் இமைக்க
போதம் வரை புத்தகம் இடைக்கையதுபொற்ப
ஓதியுணராது அலறி ஓலமிடும் வேதம்
பாதுகை களாகி இருபோக மலர்சூட''

அவ்வாறு தோன்றிய இறைவனை வணங்கி, மாமுனிவர்கள் தமது மனக்குறையை வெளியிட இறைவன் வேதத்துக்கு பொருள் கூறலானார். ''ஐயன்மீர் வேதத்தின் இரகசியமான பொருளை அறிதல் மிக மேன்மையளிக்கும். வேதத்தின் பொருள் இங்குசொக்கலிங்கமூர்த்தியாக எழுந்தருளியிருப்பதாகக் கூறுவர். வேதம் இச்சொக்கலிங்க மூர்த்தியையே துதித்துப் பாடும். இச்சொக்கலிங்க மூர்த்தியே, உலகத்தைப் படைக்கும் பிரமனாகவும், காக்கும் திருமாலாகவும், முக்கண் மூர்த்தியாக சங்காரத்தையும் நிகழ்த்துவர். இந்த லிங்கத்தில் தான் பல தத்துவங்களும் தோன்றும். நான்கு வேதங்களும் இறைவன் நான்கு முகங்களில் தோன்றின. நான்கு வேதங்களில் நான்கு சாதிப் பிரிவுகள் தோன்றின. வேதமும் கருமகாண்டம் ஞானகாண்டம் எனப் பிரிந்தது. கருமகாண்டம் இறைவனை அருச்சித்து புகழ்வது, ஞான காண்டம் இப்பெருமானின் சச்சிதானந்த நிலையைக் காட்டும்''.



'நித்திய கருமங்களைச் சரிவரச் செய்தால் ஞானம் உண்டாகும். கருமத்தினால் மனம் தெளிவடையும், அதனால் தருமம் உண்டாகும். தருமம் சாந்தியை உண்டாக்கும். அட்டாங்க யோகத்தை அளிக்கும். சிவ பூசை செய்வதாலும், சிவனடியாருக்கு சேவைசெய்வதாலும் வேதப்பொருளை அறிந்து கொள்ளலாம்'' எனக் கூறிய இறைவன் முனிவர்களின் முதுகை கருணையுடன் தடவி இலிங்கத்துள் மறைந்தான். வேதமருளிச் செய்த வேத நாயகம் அறியாமையை நீக்குமாறு வேண்டுவோமாக!

(தொடரும்)



# "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை"

அண்ணாமலை அடிகள்

தமிழகத்தில் பிறந்து வாழ்ந்து அருள் நிலை எய்திய அருளாளர் மிகப்பலராவர். சைவ சமய குரவர் நால்வரும், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க அடிகள் போன்ற துறவியரும் ஆழ்வாராதியரும் தம் பாடல்களில் பல இடங்களில் தம்மை நாயேனை என்று மிகத் தாழ்த்திக் கூறியுள்ளனர். அவ்வாறு கூறியவர்களுள் மாணிக்கவாசகரும் ஒருவர். அவர் திருவாசகத்தில் பல இடங்களில் தம்மை நாய்க்கு ஒப்பிட்டுத் தாழ்த்திக் கூறியுள்ளார்.

**சில எடுத்துக் காட்டுகள்**

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
(சிவபுராணம்)

நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல 'மார்தரு பொதுவினில் வருகென
(கீர்த்தித் திருவகவல்)

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான்
பிச்சேற்றி
(திருவம்மானை)

நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை
ஏற்றுவித்த
(அச்சோபத்து)

இவ்வாறு தாழ்த்தி ஒப்பிட்டுக் கூறியமை தமக்கு மட்டுமன்று; தம் நூலை ஓதும் அத்துணை பேரையும் அகப்படுத்திக் கொண்டு கூறியதாகும் என அறிஞர் கூறுகின்றனர். இஃது உண்மையாகும். ஏனென்றால் அப் பாடல்களை நாம் பாடும்போது நமக்கும் அத்தகைய தாழ்ச்சியும் மன உருக்கமும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவேயாகும். அவ்வாறாயின் நமக்குப் பொருந்தும் இக்கூற்று அருளாளர்க்குப் பொருந்துமா என்பது கேள்விக்குரியதாகும்.

**நாயின் நல்ல தீய செயல்கள்**

சிங்கம், புலி, யானை, கரடி போன்ற கொடிய விலங்குகளும், எருது, ஆடு, குதிரை, ஒட்டகம் போன்ற சாதுவான விலங்குகளும் இருக்க, இவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்காமல் நாயைத் தேர்ந்தெடுத்துத் தமக்கு ஒப்பாகக் கூறியிருத்தலைச் சிந்திக்க வேண்டும். பிற விலங்குகட்கு இல்லாத சிறந்த மூன்று நற்செயல்கள் நாய்க்குண்டு. அவை (1) எஜமானனையே சார்ந்திருத்தல் (2) நன்றியுடன் நடந்து கொள்ளுதல் (3) எஜமானன் தனக்குத் தீங்கிழைத்தாலும் அன்பு நீங்காமல் வாலைக் குழைத்தல் ஆகியவையாகும். பிற விலங்குகட்கில்லாத மூன்று இழிந்த தீச்செயல்களும் நாய்க்குண்டு. அவை (1) தன் இனத்தைக் கண்டால் குரைத்தல் (2) தான் உண்டதைக் கக்கி மீண்டும் கக்கிய அதனையே உண்ணுதல் (3) காண்போர் பலரும் வெறுக்கும்படி நடுத் தெருவில் காமத்தில் சிக்குண்டு தவித்தல் ஆகியவையாகும். இச்செயல்கள் பிற விலங்குகட்கு இல்லை என்பது வெளிப்படை. ஆனால் மனிதருக்குண்டு என்ற பொருளில் நாயினை ஒப்பிட்டுப் பாடியுள்ளனர். மேற்சொன்ன நற்செயல்கள் அருளாளர்க்கும் தீச்செயல்கள் மற்றவர்க்கும் பொருந்தும் என்பதை உணர வேண்டும்.

**நற்செயல்கள் பொருந்தும் முறை**

நாய் தன் எஜமானனையே எண்ணியும் சார்ந்தும் இருக்கும். அருளாளரும் சிவனையே சித்தத்தில் வைத்துச் சார்ந்திருப்பர். நாய் நன்றியறிதலை இயற்கையாகப் படைப்பிலேயே பெற்றுள்ளது. அருளாளரும் ஆண்டவன் தமக்குத் தனு (உடல்) கரண, புவன, போகங்ளைக் கொடுத்தும், பக்திநெறி காட்டி முத்தி பெறச் செய்யும் பெருங் கருணைச் செயல்களை எண்ணி எண்ணி இறைவன்பால் என்றும் நன்றியுடையவராய் இருப்பது. நாய்க்கு எஜமானன் தவறி தீங்கிழைத்து விட்டால் அது சினங்கொண்டு குரைத்துக் கடிக்காமல் அவன் தன் அருகில் வந்தால் நன்றியுடன் வாலையாட்டும். 'எறிந்தவேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்'' என்று நாலடியார் கூறுகின்றது. அருளாளரும் தீவினை வயத்தால் துன்பம் நேர்ந்தால் இறைவனை நொந்து கொள்ளாமல் அவன் அருளையே எதிர்நோக்கிச் சரணடைந்து நிற்பர். குலசேகர ஆழ்வாரும்

''வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் (டு)
அம்மாநீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே''

என்று பாடியுள்ளமை நினைவு கூரத்தக்கது.

**தீச்செயல்கள் பொருந்தும் முறை**


நாய் தன் இனத்தைக் கண்டால் குரைக்கும். இவ்விழிசெயல் மனிதரிடத்தேயும் உண்டு. ஆன்மநேயம் இல்லாமல் ஜாதி, இன, சமய, மத, மொழி வேறுபாட்டுணர்வுடன் வெறி கொண்டு ஒருவரை ஒருவர் பகைத்தும் போரிட்டும் துன்புற்று வாழ்வதைக் கண்கூடாகக் காண்கின்றோம். நாய் உண்டதைக் கக்கும். கக்கிய அதனையே மீண்டும் உண்ணும். இத்தீச்செயலிலும் மனிதர் இளைத்துவிடவில்லை. ஆயுள் முழுதும் அனுபவித்தஇழிந்த சிற்றின்பங்களையே மீண்டும் மீண்டும் அடைய விரும்புகின்றனர். நாயேனை என்பதற்கு இப்பொருள் ஒன்றினையே இதுவரை எல்லா அறிஞர்களும், வித்துவான்களும், புலவர்களும் கூறிவந்துள்ளனர் என்பதை ஈண்டுக் கருதுதல் வேண்டும். நாய் நடுத்தெருவில் காண்போர் வெறுக்கும்படி காமத்தில் சிக்குண்டு தவிக்கின்றது. மனிதரில் சிலரும் எப்போதுமே காம இச்சையில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அனைவரும் அறிவோம்.

இதுகாறும் கூறியவற்றால் நாம் அறிவதென்ன? அருளாளர் தம் நிலைக்கு ஏற்ப உயர்ச்சிக்கும் நம்மை அகப்படுத்திக் கொண்டு பாடிய நிலைக்கு ஏற்பத் தாழ்ச்சிக்கும் பொருந்த நாயினை ஒப்பிட்டுக் கூறிய சதுரப் பாட்டினை எண்ணி எண்ணி மகிழ வேண்டும். இக்காரணம் பற்றியே உயர்ச்சியும் தாழ்ச்சியுமாகிய இருவகை செயல்களைப் பெற்றுள்ள நாயினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர் என்பது விளங்கும்.

**அருளாளர் வாக்கில்**

''தம்மானை அறியாத அழிவிலா நாயேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், ''நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்'' என்று திருப்போரூர் சிதம்பர சுவாமிகளும், ''தாயினும் இனிய நின்னைச் சரணென அடைந்த நாயேன்'' என்று தாயுமானவரும், ''நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன் ஆயினும் அருளினை அருட்பெருஞ் ஜோதி'' ''நாயேன் பிழையினி நாடாது நல்லருள் நல்க வருவாயே ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கம்'' என இராமலிங்க அடிகளும் மற்றும் பலரும் பாடியுள்ளனர். அருளாளர் வாக்கில் அமைய நாய் செய்தபேறு பெரும்பேறாகும்.

— — — —



திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத்திற்குப் பக்தர்கள் தங்கும் விடுதி ஒன்றைத் தொழிலதிபர் திரு பி. வி. சம்பந்தம் அவர்கள் தம் சொந்த செலவில் கட்டி வழங்கினார்கள். அதற்கான ஆவணங்களைத் திருமிகு பி. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு) அவர்கள், நம் ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., அவர்களிடம் ஒப்படைக்கிறார்.



# விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்

**செந்தமிழ்ச் சைவமணி கோ. சண்முகம், பி.காம்.**

''புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதுஎனக் கருளி'' (51-54)

அதிக நுட்பமான எட்டுக் கொத்தாக அமைந்துள்ள உடலின் தன்மைகளை எனக்குப் புலனாகும்படியும், பார்க்கும்படியும் செய்து, மனத்தினால் சகஸ்ராரம் என்கிற துவாத சாந்த வெளியை யான் காணுமாறு செய்து, மேலான யோக நிலையில் இருக்க வைத்து சாலோக சுகத்தை இனிதாக அருள் புரிந்து,

இறைவன் நமக்கு அளித்த உடம்பு இருவகைப்படும். ஒன்று, எல்லா உயிர்களுக்கும் பிறப்பளித்த உடம்பு-பிறப்புடம்பு. இரண்டு சிறப்புடம்பு என்கிற நுண்ணுடம்பு, இவ்வுடம்புக்குக் காரணம் மல ஆற்றலே. இம்மலவாற்றலை அகற்றக் கண், கை, வாய், தலை ஆகிய கருவிகளுடன் கூடிய புறத் தொழிலுக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொடுக்கும் உடம்பே சிறப்புடம்பாகும். இச்சிறப்புடம்பை நுண்ணுடம்பு என்றும் கூறுவர். நுண்ணுடம்பு ஓசை ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐந்து தன் மாத்திரையும் இறப்பு, எழுச்சி மனம் மூன்றும் ஆகிய எட்டும் சேர்ந்தது. இதையே திருமூலர் உடலின் பஞ்சபேதப் பகுதியில்,

''அத்தன் அமைத்த உடலிரு கூறினிற்
சுத்தமாதாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்
சுத்த பரிச உருவ ரசகந்தம்
புத்திமானாங்காரம் புரியட்ட காயமே''

என்கிறார்.

நுட்பமான உடலின் தன்மைகளையும் எட்டு நிலைகளையும் உணரும்படிச் செய்து என் உள்ளுணர்வில் பிரமரந்திரத்திற்குச் செல்லும் வழியைக் காட்டிச் சித்தியையும் இனிதாக உள்ளங் கொள்ளுமாறு அருளிச் செய்தார் விநாயகப் பெருமான் என்கிறார் தமிழ் மூதாட்டி 51-54 அடிகளில்

''என்னை அறிவித்து, எனக்கருள் செய்து,
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
(55—59)

ஆன்மாவாகிய எனது நிலையை யான் அறியச் செய்து, எனக்குச் சாமீப பதத்தை அருளி பிறவிதோறும் தொடர்ந்து வரும் இருவினைகளின் வேரான கன்ம மலத்தை முற்ற ஒழித்து, வாயால் பேசுதலும், மனத்தால் நினைத்தலும் இல்லாத மோனநிலை ஒழுக்கம் நிறைந்து பெருகச் செய்து, அதனால் அடியேனின் மனத்தைத் தெளிவுறச் செய்து இருளைச் சார்ந்தபோதும் ஒளியைச் சார்ந்த போதும் இவ்விரண்டிற்கும் என்கண்ணே இடமாவது போல;

விநாயகப் பெருமான் குருவடிவு தாங்கி ஞானத்தை அறிவித்து அருள் செய்து, நல்வினை தீவினைக்கு அடிப்படையான கன்ம மலத்தை முழுவதும் ஒழிப்பவர்.

ஒவ்வொரு ஆன்மாவும், ஆணவம், கன்மம் மாயை என்னும் மூன்று கற்களோடு நல்வினை தீவினை என்னும் இரண்டு கயிறுகளால் கட்டப்பட்டுப் பிறவி என்னும் கடலில் தள்ளப்பட்டுள்ளது. இதைத் தெய்வச் சேக்கிழார்.

''இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள்''.

என்று குறிப்பிடுகின்றார்.

அடுத்து, நினைப்பு மறப்பு இல்லாமல் தமது மனத்தைத் தெளிவுபடுத்தியதைஒளவை

யார் குறிப்பிடுகின்றார். நினைப்பு மறப்பு மாறி மாறி வாழ்க்கையில் நிகழ்ந்து கொண்டே உள்ளது. எனவே அனைத்துத் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. இதனைப் பகல், இரவு என்று கூறுவர்.

''இரவு பகல் அற்ற இடத்தே ஏகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே''

என்கிறார் தாயுமானவர் பராபரக்கண்ணியில். இதையே குமரகுருபர சுவாமிகளும்.

''போக்கும் வரவும் நினைப்பும் மறுப்பும்பகலும்
இரவும் கடந்து உலவா இன்பம் மருவுவித்து''

என்று குறிப்பிடுகின்றார்.

நினைப்பும் மறப்பும் அற்றவர்கள்தாம் பிறப்பு இறப்பை வெல்ல முடியும்.

''நினைப்பும் மறப்பும் இல்லாதவர் நெஞ்சம்
வினைப்பற்று அறுக்கும் விமலன் இருக்கும்''

என்று உணர்த்துகின்றார் திருமூலர்.

ஆன்மா இந்நிலையை அடைகிறபோது அதன் மனம் தூய்மையாக இருக்கும்.

''மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு;
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப்பார்க்கு
மன்மனத்துள்ளே மனோலய மாமே.''

என்று இதனைத் தெரிவிக்கிறார் திருமூலர்.

கண்கள் இருளையும் ஒளியையும் காண்கின்றன. அதுபோன்று அறியாமையால் நிறைந்த அகம், அறிவுமயம் ஆவதும் உண்டு. இவ்விரு நிலைகளும் விலகவேண்டும். ''இருளது சக்தி வெளியது என் அண்ணல்'' என்னும் திருமந்திரக் கருத்துப்படி தெளிந்த இடத்தில் இன்பத்தை அளித்ததை ஔவை பிராட்டியார் குறிப்பிடுகின்றார். 55—59 வரிகளில்.

''அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி, என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள் வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி''
(60—64)

திருவருட் பேற்றைத் தரும் இன்பச் செய்தியை அழுந்த என் செவியில் உபதேசித்து வரம் பெற்ற எல்லையற்ற சாயுச்சிய இன்ப உணர்வினை நல்கி பிறவித்துயரை வேரறுத்து அருள்நெறி மார்க்கத்தைக் காட்டியருளி ஓசையாகிய புற உலகத்தில் சதாசிவத்தினையும், மனமாகிய அக உலகத்தில் சிவலிங்கத்தையும் காணும்படிச் செய்து;

காண இயலாத அருள் வழியை ஆன்மாவிற்குக் காட்டும் கருணையை 'அல்லல்களைந்து அருள் வழி காட்டி' என்று குறிப்பிடுகின்றார் ஔவையார். இதையே,

'பாராதி யண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியின் உண்மை காட்டி
பற்றுமன வெளிக்காட்டி, மனவெளியில் தோய்ந்த
பாவியேன் பரிசு காட்டி''.

என்று குறிப்பிடுகின்றார் தாயுமானவர்.

அருள் வழியில் செல்லும் ஆன்மா அன்பும் அறிவும் பெற்றுப் பேரின்பம் எய்தும், அப்போது புறத்தில் சதாசிவத்தையும் அகத்தில் சிவலிங்கத்தையும் இறைவன் காட்டுவான்.

''சத்தமுஞ் சத்த மனமும் மனக்கருத்
தொத்தறி கின்ற விடமும் அறிகிலர்;
மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு
அதன் இருப்பிடம் அவ்விடத்தானே.''

என்று இதனை அற்புதமாக சுட்டிக் காட்டுகின்றார் திருமூலர். (தொடரும்)

மரணத்தின் போது

## மனிதன் நிலை

ஒரு வீட்டைக் காலி செய்பவர் முதலில் எல்லாப் பொருள்களையும் ஒரு இடத்தில் சேர்த்து வைப்பர், பின் கிளம்புவர். இதே போல ஜீவன் மரண காலத்தில் கர்மேந்திரியம் ஞானேந்திரியம் முதலியவைகளை இருதயத்தில் கொண்டு வந்து சேர்க்கிறது. இது தான் மரணாவஸ்தை எனப்படும். ஒவ்வொரு இந்திரியமாக மனதில் வரும்போது அந்தந்த இந்திரியங்கள் வேலை செய்வது நின்று போகிறது.

முதலில் வாக்கு, கை, கால், ஜல மலத் துவாரம் என்ற ஐந்து கர்மேந்திரியங்கள் லயமாகின்றன. பின் கண், காது மூக்கு நாக்கு ஸ்பரிசம் என்ற 5 ஞானேந்திரியங்கள் வந்து மனதில் அடங்கும். அப்போது மனமும் பிராணனும் மாத்திரம்இருக்கும். மனமும் பிராணனில் லயமாகும். அப்போது சுவாசம் மட்டும் இருக்கும். குதத்திலுள்ள அபானனும் நாபியிலுள்ள சமானனும், உடலெங்கும் பரவியுள்ள வியானனும் இருதயத்திலுள்ள பிராணனில் வந்து சேருகின்றன. இந்தபிராணன் கொஞ்சம் கொஞ்சமாகஅடங்குகிறது. வாழ்க்கைப்பயணம் முடிந்துவிட்டது' இந்த சமயத்தில் தான் பகவானின் நினைவு இருக்க வேண்டும். இதற்காகவே மகான்கள் அரும்பாடு பட்டிருக்கிறார்கள்.

# மூவர் ஏற்றிய மொழி விளக்கு

மயிலை சீனிவாசன்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்ற முதலாழ்வார் மூவரும், ஓடித்திரியும் யோகியர்களாய், செஞ்சொற்கவி களுமாகி, தம்மில் ஒருவரையொருவர் அறியா மல் தனித்தனியே, பலவிடத்தும், சஞ்சரித்து வருகையில் பொய்கையாழ்வார் திருக்கோவ லூரையடைந்து, அங்கு மிருகண்டு முனிவரது திருமாளிகையிற் சென்று, அதன் இடைகழியில் சயனித்துக் கொண்டிருந்தார்.

வெளியே மழைக்காற்று 'சிலீர்!' என்று வீசுகின்றது. சிறு தூறலாக மழை பெய் கின்றது. பூதத்தாழ்வாரும் அவ்விடத்தில் வந்து வாசலில் நிற்கிறார்; 'படுத்துக் கொள்ள இடம் கிடைக்குமா? என்று கேட்கிறார். இடைகழியில் படுத்திருந்த பொய்கையாழ்வார் ''இங்கே ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்க லாம்'' என்று சொல்லி பூதத்தாழ்வாருக்கு இடம் கொடுக்கிறார். இருவரும் இறைவனைப் பற்றி உரையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

அப்பொழுது வெளியே பெருமழையும் காற்றும் கலந்தடிக்கின்றன. அப்போது பேயாழ்வார் அங்கே ஓடிவந்து தமக்கு இடம் கிடைக்குமா என்று கேட்கிறார். இடைகழி யில் இருந்த இருவரும் ''ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம்!'' என்று சொல்லி அவரையும் அழைக்கிறார்கள்!

இப்போது ஒருவரை யொருவர் தெரிந்து அளவளாவிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட பாகவதசிகாமணிகள் கூடி பகவானுடைய கல் யாண குணவைபவத்தை புகழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அப்போது அங்கே முன்இல்லாத நெருக்கம் ஏற்பட்டது.

நாலாவது பேர்வழி யாரோ ஒருவர், எப்படியோ அங்கு வந்து தங்களுக்கிடையே புகுந்து நெருக்கிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. என்ன அதிசயம்! இந்த மூன்று பேர்களைத் தவிர இங்கே இப்படி வந்து நின்றவர் யார்? தீபம் கிடைப்பதற்கு அந்த இருட்டிலும் மழையிலும் வேறு வழியில்லை.

இந்த நிலையில் பொய்கையாழ்வார் ஒரு தீபம் கொண்டு வருகிறார். எப்படிப்பட்ட தீபம்? ''வையம் தகளியா, வார் கடலே நெய் யாக வெய்ய கதிரோன் விளக்காகச்-செய்ய சுடாழியான் அடிக்கே சூட்டினன் சொல்மாலை இடராழி நீங்குகவே என்று.''

இந்தத் தீபத்தால் புற இருள் போயிற்று.

பூதத்தாழ்வார் வேறொரு விளக்கை ஏற்றுகிறார். அந்த விளக்கு

''அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.''

இந்தத் தீபத்தால் அக இருள் அகன்றது.

புறஇருளும், அக இருளும் அகன்று ஏற் பட்ட ஞான வெளிச்சத்திலே, அந்த ஞானா னந்த சொரூபத்தைக் கண்டு அனுபவிக்கிறார் பேயாழ்வார் நெஞ்சென்னும் உட்கண்ணாலே. பிறகு அந்த அனுபவத்தை

''திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன்.
திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன்-
செருக்கிளரும் பொன் ஆழிகண்டேன், புரி
சங்கம் கைக் கண்டேன் என் ஆழி வண்ணன்
பால் இன்று.'' என்று கூறுகிறார்.

இப்படி இறைவனால் ''மயர்வறமதி நலம் அருளப் பெற்ற'' இந்த மூவரையும் முதலாழ் வார்கள் என்று சொல்லுகிறார்கள். இவர் களுடைய திருப்பாடல்கள் திவ்யப் பிரபந்தத் தில் ''இயற்பா'' என்ற பகுதியில் முதல் திரு வந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என்று மூன்று அந்தாதிகளாகச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இவை இவர் களுடைய ஆத்மானுபவங்களோடு பாகவத தர்மத்தின் உயர்ந்த நோக்கத்தையும், உயிர் நிலையான சில கருத்துக்களையும் வெளியிடு கின்றன.

இந்த வரலாற்றை பாரதம் பாடிய வில்லி புத்தூரரின் குமாரரான வரந்தருவார்,

''பாவருந்தமிழால் பேர் பெறு பனுவல் பாவலர்
பாதி நாள் இரவின்
மூவரும் நெருக்கி மொழி விளக்கு ஏற்றி
முகுந்தனைத் தொழுத நன்னாடு''

வில்லிபாரதம், சிறப்புப்பாயிரம்—9

என்று வாயாரப் புகழ்ந்துப் பாடுகிறார்.

# பஞ்சாட்சரமகிமை

மு. கிருட்டிணன், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு)

பஞ்சாட்சரம் என்று சொல்லுக்கு ஐந்து எழுத்துக்கள் என்பது பொருள். சிவாயநம அல்லது நமசிவாய என்பதுதான் அந்த ஐந்து எழுத்துக்கள். இச்சொல் ஒரு மந்திரம்; சிவபெருமானையும் வா அருள்சத்தியாகிய உமாதேவியையும் ய உயிரை (ஆன்மா)யும் நம் மும்மலங்களையும் குறிக்கும். ந என்பது திரோதை. ம என்பது மாமாயை. திருமூலர் திருமந்திர நூலில் இதைப் பஞ்சாக்கரம் என்று குறிப்பிடுகின்றார். இது ஐந்து வகைப்படும்.

தூலம், சூக்குமம், காரணம், மகா காரணம், மகா மனு என்பவை அவை.

நகரத்தை முதலாக வைத்து நமசிவாய என்று ஓதுவது தூலபஞ்சாக்கரம். இது சமயா சாரியரால் உபதேசிக்கப் பெறுவது; இம்மைப் பயனும் மறுமைப் பயனும் அளிப்பது.

சிகரத்தை முதலாக வைத்து சிவயநம என்று ஓதுவது சூக்கும பஞ்சாக்கரம். இது ஞானாசிரியரால் உபதேசிக்கப் பெறுவது. முத்திப்பயனை அளிப்பது.

யகரம் நடுவில் நிற்க பதி எழுத்தும் அருள் எழுத்தும் முன்னும் பின்னுமாக இருபுறமும் அமைத்து சிவயசிவ என்று ஓதுவது காரண பஞ்சாக்கரம். இது அதிசூக்கும பஞ்சாக்கரம் முத்தி பஞ்சாக்கரம் எனப் பெறும். இதை ஓதுவதால் தீதில் சிவஞான யோகம் சித்திக்கும்.

காரண பஞ்சாக்கரமாகிய சிகர வகர யகரங்களுள் யகரமாகிய ஆன்மா வகரமாகிய அருளிலே லயப்பட்டு நிற்க சிகரமும் வகரமும் மட்டும் சிவ என்று விளங்குவது மகா காரண பஞ்சாக்கரம். இதை ஓத தீவினை மாளும். தேவராவர்; சிவகதிசித்திக்கும்.

மகாகாரண பஞ்சாக்கரமாகிய சிகர வகரம் இரண்டினுள் வகரமாகிய அருளையும் தன்னிடத்து வயப்படுத்தி அடக்கிக்கொண்டு சிகரம் மாத்திரம் தனித்து நிற்பது மகாமனு-சி.

இது நாயோட்டு மந்திரம் என்றும் பெரு எழுத்து என்றும் பேசா எழுத்து என்றும் கூறப் பெறும். இது நான் மறை வேதம் என்றும் நாதனிருப்பிடம் என்றும் நாதாந்த சோதி என்றும் கூறுகிறார் திருமூலர். (திருமந்திரம் 3051).

திருப்பெருந்துறையில் குருந்தமரத்தினடியில் வாதவூரர் வரும் வழியில் மாணாக்கர் பலரோடும் காத்திருந்து அவருக்கு சூக்கும பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து அருளினார்.

''சூக்க மாகுமைந் தெழுத்தினிற் சுற்றிய பாச
வீக்க நீக்கிமெய் யானந்தம் விளைநிலத் துய்த்துப்
போக்கு மீட்சியும் புறம்பிலாப் பூரண வடிவம்
ஆக்கினா னொரு தீபகம்போல்வரு மண்ணல்''

திருவிளையாடற்புராணம் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் பாடல் 46. மேலும் அவருக்கு மாணிக்க வாசகன் என்ற தீட்சா நாமத்தையும் சூட்டியருளினார்— பாடல் 50.

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடி யேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''

என்ற திருவாசகப் பாடலில்(553) மணிவாசகப் பெருமான் ஐந்தெழுத்து உபதேசம் பெற்றதைக் கூறுகிறார்.

உபதேசம் பெற்ற பிறகு பாடிய முதல் பாட்டிலேயே நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க என்று தொடங்கியுள்ளார் (சிவபுராணம்).

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்

சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்

சிவசிவ என்றிடத் தேவரு மாவர்

சிவசிவ என்னச் சிவகதி தானே''

என்று திருமூலரும் (திருமந்திரம் 2716)

''சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்கு

அபாயம் ஒருநாளும் இல்லை உபாயம்

இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்

விதியே மதியாய் விடும்''

என்று ஔவையாரும் (நல்வழி 15)

''நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்

நமச்சி வாயவே நானறி விச்சையும்

நமச்சி வாயவே நாநாவின் றேத்துமே

நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே''

என்று அப்பரும் (தனித்திருக்குறுந்தொகை - தேவாரம் 6113)

'ஆயிரமன் றேந்நூறும் அன்றேஈ ரைந்தன்றே
ஆயிரம் பேர் எந்தைஎழுத் தைந்தே காண்-
நீ இரவும்
எல்லு நினைத்தியென ஏத்துகினும் எந்தாய்
வீண்
செல்லுமனம் என் செய்கேன் செப்பு''

என்று வள்ளற் பெருமானும் (சிவநேச வெண்பா 2035)

''அஞ்செழுத்தை ஓதாமல் அன்பாய்
அனுதினமும்
நெஞ்சகத்திற் சற்று நினையாமல்-வஞ்சமுற்ற
இன்னா வினைப் பிறவி எப்படிப்போம்!
இப்புவிமேல்
மன்னா சிதம்பரதே வா''

என்று சிதம்பரம் குருநமசிவாய தேவரும் (சிதம்பரவெண்பா 56) பாடி அருளியுள்ளனர். ஆகவே ஐந்தெழுத்து மந்திரம் சிவபெருமானே தோற்றுவித்தது என்றும், அதனை ஓதி பலரும் பயனைப் பெற்று உய்ந்துள்ளனர் என்றும் அதை ஓதுவார் இன்றும் என்றும் பயனடைவர் என்பதும் தெள்ளிதின் விளங்கும். சைவ சமயக் குரவர்களில் திருஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் நமச்சிவாயப் பதிகங்களை அருளியுள்ளனர்.

திருஞான சம்பந்தர் தமக்கு நடத்தப்பட்ட உபநயனச் சடங்கின்போது மறையவர்களுக்கு வைதிக நூற் சடங்குகளில் வந்த ஐயப்பாடுகளை எல்லாம் தெளியும்படி அருள் புரிந்து எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்குக் காரணமாயிருப்பது திருவைந்தெழுத்தே என்பதை விளக்கி ''துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்'' என்னும் பஞ்சாக்கரப் பதிகம் பாடியருளினார். இப்பதிகத்தில் 11 பாக்கள் உள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் அஞ்செழுத்தின் மேன்மையைக் கூறியுள்ளார். இரண்டாவது பாட்டில் ''வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே'' என்று கூறியுள்ளார்: திருக்கடைக்காப்பில் ''அற்றமில் மாலை ஈரைந்தும் அஞ்செழுத்து உற்றன வல்லவர் உம்பர் ஆவரே'' என்று அருளியுள்ளார். இப்பதிகத்தை ஓதுவார்கள் ''உம்பர் (தேவர்) ஆவர்'' என்று கூறியதை திருமூலரும் ''சிவ சிவ என்னத் தேவருமாவர்'' என்று திருமந்திரத்தில் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

திருநல்லூர்ப் பெருமணத்தில் திருஞான சம்பந்தருக்குத் திருமணம் நடந்தது. திருஞான சம்பந்தர் தம் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்த அனைவரையும் அழைத்துக் கொண்டு ''கல்லூர்ப் பெருமணம்'' என்ற பதிகத்தைப் பாடி கோயிலுக்குள் நுழைந்த உடன் ஈசன் அருளால் கர்ப்பகிரகத்தில் ஒரு சோதி தோன்றியது. அப்பொழுது ''காதலாகிக் கசிந்து'' என்று தொடங்கும் நமசிவாயப் பதிகத்தைப் பாடிக் கொண்டே எல்லோரையும் அந்தச் சோதியில் இரண்டறக் கலக்கச் செய்தார். இதுதான் அவர் பாடிய கடைசிப் பதிகம்.

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் நமச்சிவாய மந்திரத்தை ஓதுவதால் ஏற்படும் பயனைக் கூறியுள்ளார். முதல் பாட்டில் ''வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே'' என்று கூறியிருப்பது பெரிதும் சிந்திக்கத்தக்கது.

ரிக், சாமம் என்ற இரு வேதங்களுக்கு இடை நிற்பது யஜுர். இதன் இடை நிற்பது தைத்திரிய ஸம்ஹிதை. இதில் ஏழு காண்டங்கள் உள்ளன. 4-வது காண்டம் ஒன்பது ப்ரபாடகம் கொண்டது. ஐந்தாவது ப்ரபாடகத்தின் மத்தியில் உள்ளது ஸ்ரீருத்ரம். இதன் மத்தியில் நம; சிவாய, ச சிவ தாயச என்ற தூலபஞ்சாக்கரமும், சிவ என்கிற மகா காரண பஞ்சாக்கரமும் கூறப்பட்டுள்ளன. இதைத்தான் திருஞானசம்பந்தர் மேலே குறிப்பிட்ட தம் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருநாவுக்கரசரை சமணர்கள் பலவித கொடுமைகள் செய்து கடைசியில் பெரிய கல்லுடன், அவரைக் கட்டி நடுக்கடலுள் கொண்டு போய்த் தள்ளி விடுகிறார்கள். அதுபோது ''சொற்றுணை வேதியன்'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். கட்டு அவிழ்ந்து கல் தெப்பமாகி மிதந்து கரை ஏறினார். அவருக்கு நற்றுணையாக நின்றது நமச்சிவாய மந்திரம் என்றும் இப்பதிகத்தை ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே என்று உறுதிப்படுத்தியும் கூறியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருபாண்டிக் கொடுமுடி என்ற தலத்தில் திருக்கோயிலுக்குச் சென்று சிவபெருமான் திரு முன்பு நின்று வணங்கி அவரது திருமேனியை நோக்கி ''இங்குள்ள இவரை மறக்க வொண்ணாது இவர் திருவடிகளை நான் மறக்கினும் என்னு நா இடை விடாமல் அவரது திருநாமமா

திருவைந்தெழுத்தினைச் சொல்லும்'' என்று ஒவ்வொரு பாடலிலும் கூறியுள்ளார். முடிவில் இப்பதிகத்தை சொல்லுவார்க்கு துன்பம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

''வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளும் மெய் அஞ்செழுத்து''
என்கிறார் நம் சேக்கிழார்.

வள்ளலார் அருளிய திருவருட்பாவில் திருவைந்தெழுத்துப் பதிகங்கள் நான்கு. இரண்டு பதிகங்கள் தூலபஞ்சாக்கரத்தையும் ஒரு பதிகம் சூக்கும பஞ்சாக்கரத்தையும், ஒரு பதிகம் காரண பஞ்சாக்கரத்தையும் கூறுகின்றன.

''சொல் அவாவிய'' என்று தொடங்கும் பதிகத்தில் பத்துப் பாடல்கள்தோறும் ''நமச்சிவாயத்தை நான மறவேன்'' என்று பாடியுள்ளார். இப்பதிகத்தின் ஏழாம் பாடல் புகழ் பெற்றது.

''பெற்றதாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே''

''எஞ்ச வேண்டிய'' என்று தொடங்கும் பதிகப்பாடல்கள் பத்திலும் ''நமச்சிவாயம் காண் நாம் பெறும் துணையே'' என்று கூறி முடித்துள்ளார்.

''பாடற்கினிய வாக்களிக்கும்'' என்று தொடங்கும் பதிகத்தின் 11 பாடல்களில் ''சிவாயநம என்றிடுநீறே'' என்று கூறிமுடித்துள்ளார். இப்பதிகம் நெஞ்சுக்கு ''அஞ்சேல் என்று அபயம் கூறி தன் மேல் ஆணை வைத்து சிவாயநம என்று நீறு அணியும்படி சொல்லுகிறார்.

''வாங்கு வில் நுதல்'' என்று தொடங்கும் பதிகத்தின் பத்து பாடல்களிலும் ஈற்றடிகள் இரண்டையும் ''ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவ ஓம் ஓம்சிவாய என்று உன்னுதி மனனே'' என்று முடித்துள்ளார். இப்பதிகமும் மனதை நோக்கி அறிவுரை வழங்கியதாக அமைந்துள்ளது. திருஒற்றியூர் பெருமானைப் போற்றிப் பாடியது; ஒற்றியூருக்கு தன்னுடன் வரும்படி மனதை அழைப்பதாக அமைந்துள்ளது.

சிதம்பரம் ஸ்ரீ குருநமசிவாய தேவர் சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள நடராஜப் பெருமானின் மீது நமச்சிவாய மாலை என்ற ஒரு சிறு அருள் நூலைப் பாடியுள்ளார். இது 100 சிறுசிறு பாடல்களைக் கொண்டது. சிவபெருமான் பற்றிய எல்லா செய்திகளும் இதில் உள்ளன. இப்பாக்கள் உயிர் எழுத்துக்கள் 12, ஆயுதஎழுத்து ஒன்று, உயிர்மெய்எழுத்துக்களில் ககர முதல் மகரம் ஈறாக 87 எழுத்துக்கள் ஆகிய 100 எழுத்துக்களின் வரிசை முறையில் அமைந்துள்ளன. பாடுவதற்கும் மனனம் செய்வதற்கும் மிக எளிது. ஒவ்வொரு பாடலும் நமச்சிவாய என்று முடிகிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த பஞ்சாட்சரத்தை, உயிருக்கு உறுதி செய்வதை, மலங்களை நீக்கி முத்தியை தருவதை, பிறப்பறுக்கும் மகா மருந்தை உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து ஓதி ஓதி உய்வு பெறுவோமாக. மாணிக்கவாசகப் பெருமான் கூறிய வண்ணம் ''இமைப் பொழுதும் என நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று நெறியை வாழ்க்கை நெறியாகக்கொண்டுஒழுகுவோமாக;

# ஐந்து வாயுக்கள்

நம் உடலை இயக்கும் சக்திகள் ஐந்து வாயுக்கள். பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன். இவை தவிர வேறு ஐந்து உப வாயுக்களும் உள்ளன. இவை எல்லாம் செயல் பட்டால் தான் உடம்பில் கோளாறு இருக்காது. இவை செயல்படுவது நம் கையில் இல்லை.

*பிராணவாயு:*—இதயம் முதல் வாய் வரை செயல்படும் வாயு. இது செயல்பட்டால் தான் மூச்சு உள்ளே வந்து வெளியே போய்க் கொண்டிருக்கும்.

*அபானன்:* நாபியிலிருந்து கால் கட்டை விரல்வரை செயல்படும். இதனால்தான் மல ஜலம் கழிப்பது சாத்யமாகிறது.

*வியானன்:*—இது உடல் முழுவதும் வியாபித்துள்ளது. அந்தந்த உறுப்புகள் செயல் பட சக்தி அளிப்பது இதுவே.


*உதானன்:*—வாயிலிருந்து தலைவரை வியாபித்துள்ளது. இது செயல்படுவதால்தான் மூளை சரிவர வேலை செய்கிறது.

*சமானன்:* இதயத்திலிருந்து நாபி வரை செயல்படுகிறது. இதன் உதவியால்தான் சாப்பிட்ட உணவு ஜீரணமாகிறது.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



ஆப்பூர் அருள்மிகு நித்திய கல்யாண பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலய மகா சம்ப்ரோட்சண வைபவம் அண்மையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. ஆப்பூர் பதஞ்சலி சுவாமிகளின் அரிய முயற்சியால் நிறைவுபெற்றுசிறப்புறநடைபெற்ற இவ்வாலய மகாசம்ப்ரோட்சண வைபவத்தில் நம் ஆணையாளர் திருமிகு **வ. ராமதாஸ்**, ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். தவத்திரு சுருளிமலை சுவாமிகள், பிரபல திரைப்பட இயக்குநர் **கங்கை அமரன்**, துணை ஆணையாளர் திரு **தீ. ஜெயராமன்**, பி.ஏ.,பி.எல். ஆகியோர் உடன் உள்ளார்கள்.





மக்களின் அமோக ஆதரவைப் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆக
செல்வி **ஜெ. ஜெயலலிதா** அவர்கள்
24-6-91 அன்று பதவியேற்றுக் கொள்ளும் காட்சி.

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வருக்குப்
பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்கள்.